Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்க.:தா 16 (20.01.2003) திங்கட்கிழமை இதழ் : 111

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)

## இலங்கை வரும் கோபி அனான் புலிகளைச் சந்திக்கக் கூடாதாம்!

### பத்து லட்சம் கையொப்பம் திரட்டல் இன்று ஆரம்பம்



அடுத்தமாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ள ஐ.நா பொதுச செயலாளர் கோபி அனான் புலிகளைச் சந்திக் கக்கூடாது எனக் கோரும் பத்து லட்சம் கையொப்பங்க ளைத் திரட்டும் நடவடிக்கை தென்பகுதியில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை வரும் கோபி அனான் விடுதலைப் புலிக ளின் பிரதிநிதிகளைச் (10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதிக்கு மட்டுமில்லை அனா னுக்கும் தடை போடுகினமோ..

## நாய் குறுக்கே பாய்ந்ததால் விழுந்தவரை மினிபஸ் மோதியது!

### சட்டநாதர் கோவிலடியில் குடும்பஸ்தர் மரணம்

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். மீசாலைப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் தேவபாலன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வொன்றில் புகைப்படம் எடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை, நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகில் திடீரென நாய் வீதிக்குக் குறுக்கே பாய்ந்ததால் கீழே விழுந்தார். அவ்வேளை பின்புறமாக வந்த மினிபஸ் இவர் மீது (10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்திலிருந்து திரும்பும் ஆவலில் படகுகளுக்கு அலையும் ஈழ அகதிகள்!

## தடுப்பதற்கு உச்சப் பாதுகாப்பு!

(இராமேஸ்வரத்திலிருந்து நவநீதன்)

**தமிழகத்திலுள்ள ஈழத்தமிழ் அகதிகள் பெருமெடுப்பில் தாயகம் திரும்புவ தற்காக கரையோரக் கிராமங்களை நோக்கி இரவோடு இரவாக வந்து குவிந்து வருகின்றனர். இவர்கள் நாடு திரும்புவதைத் தடுக்க கடற்கரையோ ரங்களில் தமிழகப் பொலிஸாரும், கரையோரக் காவற் படையினரும் குவிக்கப் பட்டிருப்பதுடன் - உச்சப் பாதுகாப்பும் அங்கு உருவாக்கப்பட்டு வருகின்றது.**

இலங்கையில் சமாதானச் சூழ் நிலை ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து தமிழகத்திலுள்ள அகதி முகாம்களிலும், வீடுகளிலும் தங்கி யிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளில் பெருந்தொகையானோர் தமிழகத்தின் கரையோரக் கிராமங்களை நோக்கி வருகின்றனர்.

இரவோடு இரவாக வந்து சேரும் இவர்கள் தாயகம் திரும்புவதற்காக இந்திய மீனவர்களின் படகுகளைத் தேடி அலைந்து வருகின்றனர்.

இந்திய ரூபாவில் 3,000 ரூபா முதல் 5,000 ரூபாவரை கொடுத்து இவர்கள் படகுகளில் ஏறி, பாக்கு நீரிணையைக் கடக்க முயற்சிக்கின் றனர்.


இதேவேளை - இலங்கையிலி ருந்தும் படகுகள் சில - மண்டபம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி மற் றும் அவற்றை அண்டிய கரையோ ரப் பகுதிகளை வந்தடைந்து அகதி (10ஆம் பக்கம் பார்க்க)



தமிழக முகாமொன்றில் தமது அடையாள அட்டையுடன் காத்திருக்கும் ஈழத்தமிழ் அகதிகள்.

## புலிகளின் குரலை இந்தியாவில் ஆயுதமாகப் புலிகள் பயன்படுத்துவர்!

### என்கிறார் டிக்ஸிற்



(கொழும்பு)

இனிவரும் காலங்களில் புலிகள் இந்தியாவில் 'புலிகளின் குரலை' ஒரு ஆயுதமாகப் பயன்படுத்து வார்கள் என முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே. என்.டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

'கல்வ் நியூஸ்' என்ற பத்திரிகைக்கு டிக்ஸிற் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித் திருக்கிறார். (10ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே

## 700 வீடுகள், 2 ஹோட்டேல்களை விட்டு ராணுவத்தினர் வெளியேற ஆயத்தமாம்!

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே படையினர் நிலை கொண் டிருக்கும் 700 வீடுகள் மற்றும் இரண்டு ஹொட்டேல்களிலிருந்து படையினர் வெளியேறுவது குறித்து ஆலோசித்து வருவதாகச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்தில் நடைபெற்ற நான் காவது சுற்றுப் பேச்சுக்களின் அடிப் படையில் உயர்பாதுகாப்பு வலயத் துக்கு வெளியே மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை களைப் படையினர் மேற்கொள்ள வேண்டும்.

இதன்படியே 700 வீடுகள் மற் றும் இரண்டு ஹொட்டேல்களில் இருந்து படையினரை வெளியேற்று வது தொடர்பாகப் படைத்தலைமை ஆராய்ந்து வருகின்றது.

இதில் யாழ். நகரப்பகுதியில் 70 (10ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எவ்வேளையும் தேர்தல் அறிவிப்பு!

### கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல்

(கொழும்பு)

எந்த நேரத்திலும் நாடாளுமன் றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர் தல் அறிவிக்கப்படலாம் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்த இறுதி முடிவு எட் டப்படும் நிலை தோன்றியுள்ளதை யடுத்தே, ஜனாதிபதி சந்திரிகா நாடா ளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து ஐ.தே.கவும் பொதுத் தேர்தலொன்றை எதிர்கொள் வதற்கான தயார்படுத்தல் நடவடிக் கைகளில் இறங்கியிருப்பதாகத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவை மீளமைப்பது தொடர் (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் முகாம் அமைக்கும் படையினர் சாவகச்சேரி நகரிலிருந்து வெளியேறுவர்!

சாவகச்சேரிப் பகுதியில் மட்டுவில் வைரவர் கோயிலடிச்சந்திக்கும் கைதடிப் பாலத்துக்கும் இடையில் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான தென்னந்தோட்டம் மற்றும் வயல்நிலங்களை உள்ளடக்கியதாக இந்த முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த சனிக்கிழமை முதல் இம் முகாம் அமைப்புப்பணியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவிடம்

# பதவி உயர்வுகளில் அநீதி என பொலிஸ் உயரதிகாரிகள் முறைப்பாடு!

(கொழும்பு)

பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்களில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் ஜெனீவாவில் உள்ள சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

அண்மையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. இதில் தமக்கு முறைப்படியான பதவி உயர்வு, இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை என்றே இந்த பொலிஸ் அதிகாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன், பல உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இதே பதவியில் நீண்டகாலம் சேவையாற்றி வருகின்றபோதும் பதவியுயர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தமக்குப் பின்னால் சேவையில் இணைந்து கொண்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் இந்த பொலிஸ் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சுகாதார சேவைப் பணிமனை

# நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிகளை கொண்ட இவ்வலுவலகத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சுகாதார போஷாக்கு நலன்புரி அமைச்சின் செயலாளர் டாக்டர் றெஜி பெரேரா இக்கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின்போது, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகன், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் உரையாற்றினர்.

(கி,ரா)

# குறுகிய நோக்குக் கொண்ட இனவாத வேறுபாடு வேண்டாம்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

குறுகிய நோக்கிலான இனவாத வேறுபாடுகளை மறந்து பொதுநலனுக்காக எல்லோரும் அணிதிரள வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற தைப் பொங்கல் விழா வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் மறக்கப்பட வேண்டும். அனைத்து மக்களும் நாட்டைச் சமாதான சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அணி திரள வேண்டும் என்றும் -

இன ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கு நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்கள் குறித்தும் வேறு பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஒன்றுபட்ட தலைமையுடனேயே பேச்சு என்ற பாலாவின் கருத்து சரியானதே!

## அமைச்சர் ஹக்கீம் தற்போது கூறுகின்றார்

(கொழும்பு)

முஸ்லிம்கள் சார்பில் ஒற்றுமையான ஒரு அமைப்புடனேயே பேச்சு நடத்த முடியும் என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்த கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதே என்று அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியது. முஸ்லிம்களின் ஒன்றுபட்ட ஒரு அமைப்புடனேயே பேச்சு நடத்த முடியும் என்பதையே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் தனிப்பட்ட ரீதியிலோ, குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுடனோ பேச்சு நடத்த விரும்பவில்லை.

கலாநிதி பாலசிங்கம் இக்கருத்தைத் தெரிவித்த பின்னர், தாய்லாந்தில் பலமுறை சந்தித்துப் பேசினேன். இந்த விடயத்தை இத்துடன் நிறுத்திக் கொள்வதே நல்லது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பௌசியின் ஜீப் மோதி பத்து வயதுச் சிறுமி பலி!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி பயணம் செய்த ஜீப் பத்து வயதுச் சிறுமியொருத்தியின் மீது மோதி அவரைப் பலிகொண்டது.

அம்பலாங்கொடை பகுதியில் அக்குரணையில் நேற்று இச்சம்பவம் நடந்தது.

அம்பலாங்கொடை பொலிஸார் பௌசியின் கார்ச்சாரதியைக் கைது செய்ததுடன், ஜீப்பையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றனர்.

## காலாவதி திகதி குறிப்பிடாத

# கொக்கா கோலா ரின்னே சிறுவனின் மரணத்துக்கு காரணம்!

## அதிகாரிகள் சந்தேகம்

காலாவதியான கொக்கா கோலா பானங்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்ய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கொக்கா கோலா அருந்தி உயிரிழந்த 14 வயதுச் சிறுவன் டில்ஷானின் தந்தையான குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

சண்டே ஐலண்ட் வார இதழின் பத்திரிகையாளரான இவர், தமது மகன் கொக்கா கோலா பானத்தை அருந்திய சற்று நேரத்தில் சுய நினைவிழந்து உயிரிழந்ததாக கூறியுள்ளார். அவர் அருந்திய கொக்கா கோலா பானமே இதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கொக்கா கோலா நிறுவனம், கொக்கா கோலா டின்னில் ஏற்பட்ட வெடிப்பினால் அதனுள் இருந்த காபனீரொட்சைட் நஞ்சூட்டப்பட்டு இந்த விபரீதம் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த கொக்கா கோலா டின்னை பரிசோதித்த அதிகாரிகள், அதில் காலாவதித் திகதி குறித்து எதுவும் பொறிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# மரண தண்டனை கைதிகள் கணினிப் பட்டப் படிப்பில்!

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன், பேரறிவாளன் ஆகியோர் கணினி படிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் கணினி பட்டப்படிப்பில் ஒரு சான்றிதழை ஏற்கனவே முடித்துள்ளனர். தாம் தொடர்ந்து படித்து கணினியில் முதுதத்துவமாணிக் கலவியைப் பூர்த்தி செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட இவ்விருவரும் ஜனாதிபதியிடம் கருணை மனுவைச் சமர்ப்பித்துள்ளனர். 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இவர்களது கருணை மனு இந்திய ஜனாதிபதியிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வாசகர்களே, வாடிக்கையாளர்களே!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு
உங்களுக்கு அருகிலேயே இனி
எமது விளம்பர முகவர்.

## நமது ஈழநாடு விளம்பர முகவர்

இணுவிலில்

வி.லவன்
கணபதி தொலைத்
தொடர்பு நிலையம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தொலைபேசி இல.
021-2225311
070-212644




## சிறு விளம்பரம்


### மூக்குக் கண்ணாடி

1962 ஆம் ஆண்டு தொடக்கம் வெலிங்ரன் திரையரங்கு முன்பாக இயங்கிய மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம் தற்பொழுது பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன்பாக இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடியகம், யாழ்ப்பாணம். (சி-439)

ராஜா
யாழ்ப்பாணம்.



இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா
நடித்த
வசீகரா
10.30, 2.30,
6.00,9.30
(சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த
உல்லாசம்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER
(சி-397)


## இன்றைய நாள் இனிய நாள்

**20-01-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு, பணவரவு, அதிக பிரயாசை. |
| இடபம் | :- பொருள் வரவு, நல்வாழ்வு, தானதருமம். |
| மிதுனம் | :- தேகபீடை, சத்துரு வெற்றி, அதிக பிரயாசம், நல்ல வாழ்க்கை. |
| கர்க்கடகம் | :- மனப்பயம், தொழில் வெற்றி, திரவிய லாபம், குடும்ப சிறப்பு. |
| சிங்கம் | :- நிலைப்பிரிவு, மனக்கிலேசம், பொருட்செலவு, அயலவர் உதவி. |
| கன்னி | :- நண்பர்களால் நன்மை, தொழில் முன்னேற்றம், தேகசுகம், உற்சாகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- மனக்கவலை, பொருள்வரவு, திரவியலாபம், குடும்ப சுகம். |
| விருச்சிகம் | :- புத்திக்கேடு, மனக்கிலேசம், சிநேக நன்மை, பொருள் விருத்தி. |
| தனு | :- நிலைப்பிரிவு, தனலாபம், களஸ்திர பீடை, ரோகபயம். |
| மகரம் | :- பொருள்வரவு, மகிழ்ச்சி, மனைவியால் சிறப்பு, பெரியோர் ஆதரவு. |
| கும்பம் | :- நல்ல வாழ்க்கை, அமைதியான மனம், தனலாபம், புத்திரரால் நன்மை. |
| மீனம் | :- குடும்ப சிறப்பு, களஸ்திரசுகம், திரவியலாபம், நல்வாழ்வு. |

# பெல்ஜியத்தின் சமஷ்டி முறைமை சிறுபான்மையினரைக் கௌரவிக்கும்

## அந்நாட்டுச் சபாநாயகர் இலங்கை எம்.பிக்களிடையே உரை

(பிரஸெல்ஸ்)

பெல்ஜியத்தில் அமுலிலுள்ள சமஷ்டி ஆட்சிமுறை சிறுபான்மையினர் உட்பட சகல மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சிறந்த முறை எனப் பெல்ஜியத்தின் சமஷ்டி நாடாளுமன்றச் சபாநாயகர் ஹெர்மன் டீ குரோ தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் சமஷ்டி முறை பற்றி ஆராயச்சென்ற இலங்கை நாடாளுமன்றப் தூதுக் குழுவினரை வரவேற்றுப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெல்ஜியத்தின் சமஷ்டி முறைகள் பற்றி அறிந்து கொள்வதற்காகக் கனடா உட்பட பல நாடுகளிலிருந்து தூதுக்குழுவினர் பெல்ஜியத்திற்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவது ஐரோப்பிய சமூகத்தை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது எனப் பெல்ஜியம் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

சமஷ்டி அமைப்பின் மூலம் இலங்கையில் வதியும் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கி, அவர்களைக் கௌரவப்படுத்துவதுடன் நிரந்தர சமாதானத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் அடைய முடியும் என்று பெல்ஜியம் சபாநாயகர் குறிப்பிட்டார்.

# கேரதீவு-சங்குப்பிட்டி பாதையைத் திறக்க திலக் மாரப்பனவிடம் கோரிக்கை

எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழாவுக்கு முன்பதாகக் கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞ்சாலையைப் பொதுமக்கள் பாவனைக்காக மீள்த் திறந்துவிடுமாறு இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞ்சாலையைப் பாவிப்பது இன்றியமையாத தேவையாகும்.

1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தின் பின்னர் இந்நெடுஞ்சாலை, பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நெடுஞ்சாலையைச் சூழவுள்ள கிராமங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டமையினால், இந்நெடுஞ்சாலையைத் தொடர்ந்து பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்திருப்பது நியாயமற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்கள் கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைப் பயன்படுத்தாது வவுனியா மூலம் திருக்கேதீஸ்வரம் செல்வதாயின் அதிகளவு பணத்தையும், அதிகளவு நேரத்தையும் செலவிட வேண்டிய சிரமங்களுக்கு உள்ளாவார்கள்". ஆக்வே, கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைத் தாமதிக்காமல் திறந்துவிடுமாறு அமைச்சர் மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டுள்ளார்.

# முக்கிய சந்திகள் தோறும் மிலிந்தவின் அபிப்பிராயப் பெட்டி

அமைச்சர் மிலிந்த மொறகொட மக்களிடம் இருந்து தனக்கு அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அபிப்பிராயப் பெட்டிகளை அமைக்க முடிவு செய்துள்ளார்.

கிராமங்கள் தோறும் முக்கிய சந்திகளில் இந்த அபிப்பிராயப் பெட்டிகள் வைக்கப்படும் என்றும் இதன் மூலம் பொதுமக்களுடன் நேரடியான தொடர்புகளைப் பேணிக்கொள்ள முடியுமென்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா பெரும் சூழ்ச்சியை இலங்கையில் கையாள்கிறது

## சிஹல உறுமய கூறுகின்றது

(கொழும்பு)

அமெரிக்கா- இலங்கை விடயத்தில் பெரிய சூழ்ச்சியைக் கையாண்டு வருகின்றது. விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அமெரிக்கா உள்ளது என்று சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



திலக் கருணாரட்ண

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற சிஹல உறுமயவின் நிர்வாக உத்தியோகத்தர்களின் கூட்டத்திலேயே அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா சூழ்ச்சிபற்றி யாருக்கும் விளங்குவதாக இல்லை. அது, நோர்வே அரசு மூலம் பௌத்த நாடுகளான தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி பௌத்த மக்களின் விரோதத்தைத் தணிக்கப் பார்க்கின்றது என்றும் சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண, கிழக்குத் தீமோர் விடயத்தை அமெரிக்கா - அவுஸ்திரேலியா மூலம் கையாண்டு வந்தது, இங்கு - நோர்வே மூலமாக அமெரிக்கா தலையிடுகிறது எனத் தெரிவித்தார்.

# தமிழ்ச்செல்வனைச் சந்தித்த அருட்தந்தை ஜெகத் கஸ்பார்

வெரித்தாஸ் வானொலித் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளராகக் கடமையாற்றியவரும், தற்போது ஆயர்கள் மன்றத் தொடர்பு நிலையப் பொறுப்பாளராக பணியாற்றுபவருமான அருட்தந்தை ஜெகத் கஸ்பார் அடிகளார் இலங்கைக்கு வந்துள்ளார்.

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளையைச் சந்தித்து உரையாடிய, ஜெகத் கஸ்பார் அடிகள், வெள்ளிக்கிழமை வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரியவருகின்றது.

இவருடன் கனேடியப் பிரமுகர்கள் சிலரும் வன்னிக்குச் சென்றிருந்ததாகத் தெரியவருகின்றது. அருட்தந்தை ஜெகத் கஸ்பார் அடிகள் மீண்டும் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் தொிவித்திருக்கிறார்.

## இடைநிலைக் கல்வி திட்டச் செயலமர்வு திருமலையில்

வட-கிழக்கு மாகாண சபையின் இடைநிலைக்கல்வித் திட்டச் செயலமர்வு இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும், பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டடத்திற்கு வட-கிழக்கு மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கல்வி முகாமைத்துவ, கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் தெரிவித்தார்.

## படையிலிருந்து தப்பியோடிய மூவர் கைது

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய மூவரை ஆயுதங்களுடன் கிறான்ட்பாஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் ஜே.ஆர். ரகக் கைககுண்டுகளும் மேலும் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

# நூறு மாணவர்களுக்கு ஜப்பான் கல்வி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கான கல்வி உதவிகளை ஜப்பானிய அரசு வழங்கவுள்ளது. குடாநாட்டில் இருந்து நூறு மாணவர்கள் ஏற்கனவே ஜப்பானியக் கல்வி உதவி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி கற்கும் ஆர்வம் கூடிய, பொருளாதார வசதி குறைந்த மாணவர்களே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு ஜப்பானிய கல்வி உதவிகளைப் பெறவுள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுக்குரிய பணம் ஜப்பானியர்களால் வழங்கப்படும்.

தலா ஒரு ஜப்பானியர் - ஒவ்வொரு மாணவருக்குமான கல்விச் செலவுகளைப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்க தலைவராக சிவமகாராசா தெரிவு

(யாழ்ப்பாணம்)



தெல்லிப்பளை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக சி.சிவமகாராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற சங்கத்தின் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவராக சி.சிவமகாராசா, உபதலைவராக செ.பத்திநாதர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இயக்குநர் சபை உறுப்பினர்களாக ச.தனபாலசிங்கம், ஐ.அமரகுலசிங்கம், இ.இராசலிங்கம், ந.உமாகரன், எ.கந்தசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# உலக வங்கித் துணைத் தலைவர் அம்பாந்தோட்டைக்கு விஜயம்

(கொழும்பு)

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான துணைத் தலைவர் மீக்கோ நிஷிமிசு அம்பாந்தோட்டைப்பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமை குறித்து நேரில் ஆராய்ந்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பகுதிக் கிராம வாசிகளுடன் கலந்துரையாடல் நடாததிய இவர் அப்பகுதியில் நிலவுகின்ற குடிநீர் தட்டுப்பாட்டைப் போகக உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.



கல்வியியல் கல்லூரி புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று நடைபெற்றது. முதலாவது படத்தில் புதிய கட்டடத் தொகுதியையும், இவ்விழாவில் ஆசியுரைகள் வழங்கிய - தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனை இரண்டாவது படத்திலும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளையை மூன்றாவது படத்திலும், யாழ் மாவட்ட கல்வி மேம்பாட்டுத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸை நான்காவது படத்திலும் காணலாம்.

# வைரஸ் காய்ச்சல் தணிய நெருப்புக் காய்ச்சல் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வரும் நெருப்புக் காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கார்த்திகை மாதத்தில் 54 நோயாளர்களும், மார்கழி மாதத்தில் 64 பேரும், இவ்வருடம் ஜனவரி 14 ஆம் திகதி வரை 54 பேரும் நெருப்புக்காய்ச்சலுக்கான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலின் தாக்கம் குறைவடைந்த நிலையில், தற்போது நெருப்புக் காய்ச்சல் பரவும் வேகம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (கி,ச)

# பளை மத்திய கல்லூரியிலிருந்து மீட்கப்பட்ட பொருட்களை ஒப்படைக்க நடவடிக்கை

(பளை)

கடந்த யுத்த காலத்தின்போது பளை மத்திய கல்லூரியில் இருந்து மீட்கப்பட்ட சில பொருட்களும் ஆவணங்களும் மீள ஒப்படைக்கப்படவுள்ளன.

இத்தகவலைப் பளை மத்திய கல்லூரி மீள ஆரம்பிக்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வன்னிப்பிராந்திய கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், கடும் சண்டை நடைபெற்றபோது, தாம் இப்பாடசாலைக்கு வந்து பொருட்களையும், சில ஆவணங்களையும் மீட்க முடிந்ததாகவும், அவற்றை மீள ஒப்படைக்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (115)

## பிரதேச செயலகத்தில் பயன்தரு மரக்கன்றுகள்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரவெட்டிப் பிரதேசசபை தலைமை அலுவலகக் காணிக்குள்- சகல உத்தியோகத்தர்களும் தலா ஒவ்வொரு பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டுவதென மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின்படி ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டி வருகிறார்கள் எனக் கரவெட்டிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (116)

# செஞ்சிலுவைச் சங்கப் பாவனையிலுள்ள அம்புலன்ஸ் யாழ். வைத்தியசாலைக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமது பாவனையிலுள்ள அம்புலன்ஸ் வண்டியை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செஞ்சிலுவைச் சங்கம் அம்புலன்ஸ் வண்டியை வழங்கும்போது நிறுவன வரிவிலக்குப் பெறவேண்டும். இதற்குச் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு வண்டியைப் பெறுவதற்கான கோரிக்கைக் கடிதத்தினை பெற்றுத்தருமாறு செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

தற்பொழுது, மேலதிக சிகிச்சைக்காக நோயாளரைக் கொழும்புக்குக் கொண்டுசெல்வதற்கு, சிறிய வண்டிகளே பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வண்டி வந்ததும் கூடுதலான நோயாளர்களை இலகுவாகக் கொண்டு செல்லமுடியும் என்றும், மருத்துவமனை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (கி,ச)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வண்ணாங்கேணியில் முன்பள்ளி

(பளை)

வண்ணாங்கேணி முல்லையடியில் முன்பள்ளி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அனுசரணையில், வண்ணாங்கேணிக் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர் இநத முன்பள்ளியைத் திறந்து வைத்துள்ளனர். (115)

# தேநீர்க்கடை ஊழியர் மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள தேநீர்க்கடை ஊழியர் மயக்கமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். சங்கானையைச் சேர்ந்த கார்த்திகேசு பொன்னுத்துரை (வயது 52) என்பவரே மரணமானவராவார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (60)

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில். HAPPY BIRTHDAY



பெயர் : சு.ஹலீனா
முகவரி: புத்தூர் கிழக்கு, புத்தூர்.

மூன்றாவது அகவையில்.

பெயர் : ச.அருண்
முகவரி: லண்டன்.



எட்டாவது அகவையில்.



பெயர் : யோ.சங்கவி
முகவரி: 50, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# வடமராட்சி கிழக்கில் சமுர்த்தி வங்கி திறப்பு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மருதங்கேணிப் பகுதியில் சமுர்த்தி வங்கி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் மங்களவிளக்கினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் மற்றும் வடமராட்சிக் கிழக்கு கடற்புலிகளின் போராளி யாழ் மன்னன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு அரசியற்துறைச் சேர்ந்த போராளி புனிதன் ஏற்றி வைத்தார்.

சமுர்த்தி வங்கிக்கான பெயர்ப் பலகையை வடக்கு-கிழக்கு சமுர்த்தி சங்கப் பணிப்பாளர் மா.நடேசுராசா திரைநீக்கம் செய்து வைக்க, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் நாடாவை வெட்டி வங்கிப் பெட்டகத்தைத் திறந்து வைத்தார்.

### மருதானையில் கைதான இந்திய, பாகிஸ்தானியர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செலல முயன்ற பாகிஸ்தானைச் சேர்ந்த மூன்று பேரையும், இந்தியாவைச் சேர்ந்த இருவரையும் மருதானைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் பாஸ்போட், விசா ஆகிய ஆவணங்களை வைத்திருக்கவில்லை. இவர்கள் பாகிஸ்தானிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் கள்ளத்தனமாக இலங்கைக்கு ஊடுருவி உள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

# நெருப்புக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த வாய்வழி உட்கொள்ளும் மருந்து!

## அனுப்பி வைக்கப்படும் என்கிறார் றெஜி பெரேரா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தற்பொழுது நெருப்புக்காய்ச்சல் வேகமாகப் பரவிவருவதனால், நோயாளர்களுக்கு நெருப்புக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வாய்வழி உட்கொள்ளும் மருந்து அனுப்பிவைக்கப்படும் என்று, சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜி பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள், மற்றும் பணிப்பாளருடனான சந்திப்பிலே அமைச்சின் செயலாளர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், முன்பு ஊசி மூலமும், வில்லைகள் மூலமுமே நெருப்புக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

ஆனால், இவற்றைவிட வாய்வழி மூலமாக வழங்கப்படும் மருந்து விரைவாக நோயைக் கட்டுப்படுத்துவதனால் வெகுவிரைவில் அவற்றை இங்கு அனுப்பி வைப்பதாகவும் அவர் உறுதியளித்தார். (கி,ச)

### நேர்முகப்பரீட்சையில் தோற்றிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2003 ஆம் ஆண்டின் அனுமதிக்காக விண்ணப்பித்த மாணவர்கள் - நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாமல், தாம் விண்ணப்பம் அனுபபும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டினைக் காண்பித்து, விஷேட ஏற்பாட்டில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அவ்வாறு நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் உயர் புள்ளியை உடையவர்கள் - தாம் விண்ணப்பம் அனுப்பியதைப் பரீட்சைத் திணைக்களத்தில் உறுதி செய்து, பிரதம ஆணையாளரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ரா)

# உள்ளூர்ப் போக்குவரத்து நெடுந்தீவில் சீர்குலைவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இதுவரை காலமும் உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியின் அடிச்சட்டம் பழுதடைந்துள்ளதையடுத்து உள்ளூர் போக்குவரத்து சீர்குலைந்துள்ளது.

இப்பேருந்துக்குப் பதிலாக சிறிய ரகப் பேருந்து வழங்கப்படவுள்ளது. தற்போது நெடுந்தீவிலுள்ள பேருந்தினை யாழ்ப்பாணம் எடுத்துச்சென்று திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (113)

### பாஷையூரில் பட்டினிக்கு எதிரான நிறுவனம் உதவி

(கொழும்புத்துறை)

பாஷையூர்ப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் புதிதாக 75 மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்ததுடன், பாவனைக்கு உதவாத நிலையிலிருந்த மலசலகூடங்களையும் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

# மகளிர் நலன்களைப் பேண பிரதேச ரீதியாக விசேட குழுக்கள்

(சரசாலை)

யாழ்.மாவட்டத்தில் மகளிர் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்களின் நலன்களைப் பேணுவதற்காகவும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் விசேட குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.


மகளிர் நலன் தொடர்பாக அமைக்கப்படவுள்ள இவ்விசேட குழுக்களின் அலுவலர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் பிரத்தியேகமாக மக்களுடன் தொடர்புகொள்ளக் கூடியவகையில் ஒழுங்குபடுத்தப்படுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. (34)

### வடமராட்சி கிழக்கில் காடு வளர்ப்புத் திட்டம்

(சரசாலை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் காடு வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை வளங்களைப் பாதுகாக்கவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேக்கு, சமண்டலை போன்ற மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றன.



# இலக்கியச் சோலை

## வெள்ளைச் சேலை

நான் மடிக்கத் தொடங்கினேன்
என் மார்பில் அழுத்தியவாறு
கசங்கியும் மடிப்பு விழுந்தும்
இருந்தது.
முதலில் இரண்டு பெரிய துண்டுகளாக
பின்பு நான்காக –
இறுதியில் இரண்டாக –
ஒரு பாதியை மறுபாதியில் வைத்து
வெள்ளைச் சதுரமாக மடித்து
அலுமாரியில் வைத்தேன்.

எனினும் மறுசிந்தனையில்
சேலைக் கொடியில் – போடுவது
நல்லதாய் பட்டது.
எப்போது தேவைப்படுமோ தெரியாது
கிழமையில் மூன்று தடவை
உடுக்கிறேன்.
மினுக்கக் கூட நேரமில்லை.

முதலில் ஜெகத்துக்கு கட்டினேன்.
பின்பு கைரனுக்கு
இன்று அஜித்துக்கு
அடுத்து யாரோ?
ஜெகத்தின் சாவு இரவுச் சாப்பாட்டு வேளை
வீட்டில் நடந்தது.
கைரன் வேலைக்கு போகும் போது –
அஜித் பாலம் ஒன்று கட்டிக்கொண்டிருந்த போது
கொல்லப்பட்டான்.
எல்லோரும் இளசுகள்
முப்பதைத் தாண்டவில்லை.

எனக்கு நல்ல ஞாபகம்
சிறுமியாய் இருந்த போது
மரண ஓலங்களால் பயந்து
எனது காதுகளைப் பொத்தினேன்.
யாராவது இறந்தாலும் அம்மா
சொல்லுவதில்லை.

அம்மாவும் அப்பாவும் வெள்ளை
உடுத்திச் செல்வார்கள்
கவலை அப்பிய முகத்தோடு
திரும்பி வருவார்கள்.
தேசிக்காய் பாதியொன்றை தலையில்
தேய்க்காமல் – அம்மா ஒரு போதும்
வீட்டில் நுழைவதில்லை.
கிணற்றடிக்கு தோயச் செல்வார் அப்பா!
எப்போதும் மரணம் நீதியாய்
நடந்ததில்லையே!

இப்போது கிழமையில் மூன்று தடவை
வெள்ளை உடுக்கிறேன் .
மரமுற்ற முகங்களைப் பார்க்கிறேன் – அவை
தரமறுத்த வாழ்வுக்காக முதியவர்களை
குற்றம் சுமத்துகின்றன.

மரண வீட்டில்
சேலைத் தலைப்பால் – என்
கண்களை மூடி
தொண்டை காய்ந்து – இடிந்து
போகின்றேன்
தாயின் முகத்தை நோக்க முடியவில்லை.
கைகளைக் கூப்பி தந்தையை வணங்கி
மரணவீட்டில் இருந்து
கழல்கிறேன்.

வேண்டாம் வேண்டாம்!
நான் இனிமேல் சேலையை
அலுமாரி அடுக்கில் வைக்கப்
போவதில்லை.
சேலைக் கொடியில் தான்
போடுவேன்
மீண்டும் எப்போது தேவைப்படுமோ?

***ஆங்கிலத்தில் : கமலா விஜயரத்ன***
***தமிழில் : இ.கோகுலரங்கன்***

குறிப்பு:- சிங்கள மக்கள் மரண வீட்டிற்குச் செல்லும்போது வெள்ளைச் சேலை அணிந்து செல்வது வழக்கம்.

## A-9 ஐ நீளும் நினைவுகள்

பகுதி பதினைந்து

சேறிலே பாதை மூழ்கி மறைந்திடும்
சிதம்பியே முழங்கால் வரைத் தாண்டிடும்
வேறு நேர்வழி அற்றதால்... மூழ்கியும்
விழுந்தெழும்பியும் கால்கள் நகர்ந்திடும்.
வாகன... 'டயர்க்காலும்' புதைந்திடும்
மழையடிப்பின் ஒதுங்க இடமின்றி
ஏவுகுண்டுக் கொளிக்க அரணின்றி
எத்தனை துயர் அன்று சுமந்தனம்?

கொம்படிப் பாதைப் பயணந் தொடர்கையில்
சுஉற்றம்... எந்திர எருமையில் வாறதாய்
'தும்பி...' என்ற ஹெலிகளும் வந்திடும்.
துரத்தித் துரத்திக் கலைக்கும்; வெடிசுடும்.
நம்பிப் பயணங்கள் செய்ய 'மெய்' அஞ்சிடும்.
நரகவேதனைப் பட்டும்... அவசரம்
என்பவர்களில் பயணம் தொடர்ந்திடும்
இடைக்கிடை உயிர் அங்கும் பறிபடும்.

இந்தவாறு பயணம் உலைகையில்
இங்கு... யாழ்ப்பாணக் கோட்டையடிதனில்
எந்த நாளும் சமரின் சிரிப்பொலி!
இரவு பகலெலாம் யுத்த நெருக்கடி!
வந்து போயிடும் வானக் கழுகுகள்
வாயை வைத்தன... எங்கள் தெருக்களில்!
நந்தமிழ் நகர்.. நாதியே அற்றதாய்
நாற.. வாடினோம் கந்தக பூமியில். .



**- ஜெயங்கொண்டான்**

# நூல் அகம்

## தமிழ் இலக்கணப் பூங்கா




**நூலாசிரியர்: *பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்***

இந்த இலக்கணநூல் மூன்றாம் பதிப்புக் காணுகின்றது என்பதிலேயே இதன்பெறுமதி இயல்பாகவே விளங்குகின்றது.

இன்றைக்குத் தமிழில் இலக்கணம் என்பது அறவே பயன்படுத்தப்படாத நிலையில், தமிழ் வாசகங்கள் இலக்கணப் பிழையுடன் காணப்படுகின்ற வேளை இவ்விலக்கணநூல் வெளிவந்திருக்கின்றது.

உயர்தமிழ் அல்லது எழுத்துத்தமிழ், தமிழை நன்கு கற்றுத்தேர்ந்தவரிடம் மாத்திரம்தான் இருக்கின்றது என்ற மரபை தமிழ் பேசும் அத்தனை பேரும் உடைக்க வேண்டும் என்பதற்கு இந்நூல் உதவியாக அமையும்.

இந்நூலில் நமக்குத்தேவையான இலக்கணங்கள் நிறைந்திருக்கின்றன. உதாரணமாக, விசேட புணர்ச்சி என்ற விடயத்தில்,

வில+நீளம் என்பது வின்னீளம் என்றே இணைந்துவரும் எனக் காணமுடிகின்றது. இவ்வாறு நாம் அறிய வேண்டிய தாய்மொழி இலக்கணம் நிறைய இருக்கின்றது.

எனவே- நாம் பலதர உத்தியோகங்களுக்கும், பணிகளுக்கும் வரலாம். ஆனால் மொழித் தேர்ச்சியுடைவராக வருவது அவசியம் ஆகின்றதல்லவா?

மொழிவன்மை எமக்கு அவசியமாகின்றது. எமது மொழியமைப்பு மாற்றமுறாது பேணிக்காப்பாற்றுவது எம் ஒவ்வொருவரதும் கடமை.

அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், வளர்ந்தவர்கள் என அனைவருக்கும் இலக்கணம் கற்பிக்கக்கூடிய நண்பன் இந்நூல். மேலுமாக தமிழ் கற்கவரும் அந்நிய மொழியாளர் ஒருவருக்கும் உதவக்கூடியது இந்நூல்.

மரபுச் சொற்களுக்கு இதுவரை நாம் அறியாத இன்னொரு சொற்பதம் உண்டெனவும், அது இலக்கணைகள் எனவும் நூலாசிரியர் காட்டுகின்றார். இவ்வாறு பல அரிய விடயங்கள் இந்நூலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் தமிழ் மொழிக்கு மீண்டும் ஒருமுறை அரும்பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலத்தின் பதிவுகள்




**நூலாசிரியர்: *செபமாலை அன்புராசா***

மயில்வாகனம் நிமலராசனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டவாறு வெளிவந்திருக்கும் ஒரு நூல் "காலத்தின் பதிவுகள்" இது இலக்கிய நூலல்ல. ஆனாலும், வாழ்க்கைக்கு அவசியமான நூல்.

அகன்றதான உளவியல் பார்வைகளுடன் எமது அன்றாட பிரச்சினைகள் பலவற்றில் காணப்படும் வாழ்வியல் துயரத்தைத் தெளிவுபடுத்தி இருப்பதுடன், அவற்றுக்கான தீர்வுகள் யாவை? என்ற பார்வை நிறைய வந்திருக்கின்றது.

நாம் அறியாததல்ல யாழ். பெரியாஸ்பத்திரியின் நிலவரம். வெறுமனே பெரியாஸ்பத்திரி என்று சொல்லிக் கொள்கின்றோம். அதன் பணி அளப்பரியது. குடாநாட்டு மக்களுக்குக் கோவில் போன்றது. ஆனால், அங்குவரும் மக்களின் உள்ளக வாழ்வு நிலையை, அன்றாட வாழ்க்கை மெய்நிலையை கண்ணுறுபவர்கள் போதாது. இக்குறைகளை நிவர்த்தி செய்யும் விதமாக, அவர்களது பிரச்சினைகளை வெளிக்கொணரும் விதமாக செபமாலை அன்புராசா என்பவரால் எழுதப்பட்டது இந்நூல்.

அதாவது, இந்நூல் நோயாளிகள், வயோதிபர்கள், தற்கொலை முயற்சிக்கு எத்தனிப்பவர்கள், சிறுபிள்ளைகள் போன்றவர்களின் துயர்கள் பகிரப்படவேண்டும் என்கின்றது.

இந்நூலிலுள்ள பத்திகள் யாவும் ஒவ்வொரு முக்கிய தீவிர படைப்பாகக் கருதத்தக்கவை.

எம்மவர்கள் வாழ்க்கை எப்பொழுதும் ஏனோதானோ என்று நிகழ்வதால்தான் இவ்வளவு பிரச்சினைகளும் எழுகின்றன என்பது உண்மை. தேவையானளவு விளக்கம் பெறவேண்டியநிலைக்கு எம்மவர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதனை இந்நூல் சுட்டிக்காட்டுகின்றது.

தற்கொலை எத்தனத்தில் ஈடுபட்டு, இறக்கும் முன்னர் ஒரு குடும்பப் பெண் சொல்லும் வார்த்தையிது "ஐயையோ, இப்படி வேதனைப்பட்டு, சாவனெண்டா மண்ணெண்ணை ஊத்திக் கொளுத்தி இருக்க மாட்டேனே" எவ்வளவு துயரத்தைத் தாங்கின வார்த்தையிது.

இந்தப் பெண்ணின் பிரச்சினைகள் என்ன..? ஏன் அநியாயமாகச் செத்துப்போனாள்? என்ற ஏக்கம் மனதில் எழுகின்றது.

இன்னும் பல பிறவிடயங்கள் நூலில் உண்டு. ஒரு பேட்டியில் நூலாசிரியர் வைத்தியசாலையை இடம் மாற்றுவது பற்றி சிந்திக்க வேண்டுகின்றார். இது மிகநல்ல கருத்தாகவேபடுகின்றதல்லா?

எணவே- ஒவ்வொரு சராசரி மனிதனும் வாசித்து உணரவேண்டிய விடயங்களைக் கொண்ட முக்கிய நூல் இது.

**மணிபல்லவன்**

**'கவிக்கோ' அப்துல் ரகுமான் தமிழகத்தின் பிரபல்ய கவிஞர். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நேயர் விருப்பம், மின்மினிகளால் ஓர் கடிதம், பித்தனின் பாடல் தொகுதி, மகரந்த சிறகு போன்ற கவிதைத் தொகுதிகள் வெளியிட்டவர். மதச் சார்பின்மையையும், சமூக விடுதலையையும் ஆன்மீக சிந்தனைகளையும் பாடுபொருளாக முன்வைப்பதில் அக்கறை உடையவர். அண்மையில் யாழ். வந்திருந்த அவருடன் உரையாடிய பொழுது -**

# காலச்சூழலையும் நாட்டையும்

# பிரதிபலிப்பதுதான் இலக்கியத்தின் பணி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கேள்வி:- ஈழத்துக் கவிதைகளைப் பொறுத்தவரை தங்களுக்குக் குறிப்பாக யாருடைய கவிதைகளில் ஈடுபாடு இருக்கின்றது?

பதில்:- பெயர் சொல்கின்ற மாதிரி இல்லை. ஈழத்துக் கவிதைகளைப் படித்திருக்கின்றேன். புலம்பெயர்ந்த கவிதைகளைப் படித்திருக்கின்றேன். பெரிய தொகையில் படித்ததில்லை. அதனாலே பெயர் சொல்லக் கஷ்ரம், ஞாபகம் இல்லை. ஆனாலும் நிறையப் படித்திருக்கின்றேன். அண்மைக் காலத்தில், கொஞ்சம் புதுக்கவிதை மாதிரித் தொகுதியாக எனக்குக் கிடைத்தது ஜெயபாலனது கவிதைகள். தொகுதியாக வேறு எதுவும் கிடைக்கவில்லை. தனித்தனியாக உதிரிக் கவிதைகள் பத்திரிகைகளில் படித்திருக்கின்றேன்.

**நேர்கண்டவர்கள் - சேந்தன், இராஜேஸ்வரன்**

ஈழத்தமிழர் தொகுதியாக வெளியிட்டால் எங்கள் தமிழர் படிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

கேள்வி:- ஈழத்துக் கவிதையியலில் நீங்கள் முக்கிய கூறாக எதனை இனம் காண்கிறீர்கள்?

பதில்:- அண்மைக் காலமாக, கவிதைகளில் அரசியல்தான் ஆதிக்கம் செலுத்துகின்றது. அது இயற்கை. ஒரு போராட்டம் நடந்துகொண்டு இருப்பதனால் இலக்கியம் போராட்டத்தைப் பிரதிபலிப்பதுதான் இயல்பானது. இலக்கியம் காலச் சூழலையும், நாட்டுச்சூழலையும், பிரச்சினையையும் பிரதிபலிப்பது தான் அதன்பணி.

இங்கு அது அதிகமாக இருப்பதனால் பிரதிபலிக்கப்படுகின்றது.

கேள்வி:- 1983 இற்குப் பிறகு அரசியல் விடுதலை எமது கவிதைகளில் முக்கிய பாடுபொருளாக இருந்தாலும், எமது கவிதைகள் அரசியலோடு இணைந்த வகையில் சமூக விடுதலையை முதன்மை செய்கின்றன. அந்தப் பின்புலத்தில் சமூக விடுதலை எமது தற்காலக் கவிதைகளில் பதிவு செய்யப்படுவதைப் பற்றி உங்கள் கருத்து?

பதில்:- ஆம். நிறையத் தென்படுகின்றது. இப்பொழுது அண்மைக் காலமாக அதிகமான சமூக விடுதலை பற்றிய உணர்வுகள், இனவிடுதலை பற்றிய உணர்வுகள், போரியல் பற்றி உணர்வுகள் போன்றனவும், பிரச்சினை தந்த வேதனைகளை வெளிப்படுத்தும் கவிதைகளும் அதிகமாக வந்துள்ளன.


கேள்வி:- போர்க்காலக் கவிதைக்கும், போரியல் கவிதைக்கும் இடையிலான வேறுபாட்டை உலகக் கவிதைகளின் அனுபவத்தைக்கொண்டு வேறுபடுத்திக் காட்ட முடியுமா?

பதில்:- இரண்டு உதாரணங்களின் மூலம் சொல்லமுடியும். ஆபிரிக்கக் கவிதைகள், தென்னமெரிக்க நாடுகளில் ஆபிரிக்கர்கள் போராடியபோது, இரண்டு வகையான கவிதைகள் வந்தன.

போராடாத புத்திஜீவிகள் இனவிடுதலைக்காகக் கவிதை எழுதியிருக்கின்றார்கள். இதிலே நிறைய **Black Poetry** வந்திருக்கு, போரில் ஈடுபட்டவர்கள், கவிஞர்கள் என்பதிலும் பார்க்கத் தமது கவிதைகளைப் போர்க்கருவியாக அதாவது, "கவிதை ஒரு ஆயுதம்" என்ற போக்கில் ஆபிரிக்கக் கவிதைகள் ஒரு தொகுதியாக வெளியிடப்பட்டது.

இரண்டாவது உதாரணம் பலஸ்தீனக் கவிதைகள், உலக அளவிலே ரொம்பக் கூர்மையாகவும் வெப்பமாகவும் உள்ள கவிதை அரபுக்கவிதை. அதற்கு பலஸ்தீனப் போராட்டம் ஒரு காரணம். இதற்கு முன்னே உள்ள அரபுக்கவிதை பற்றி யாருக்கும் தெரியாது, அரபு இலக்கியம் தெரியாது. இன்றைக்கு இலத்தீன் அமெரிக்கக் கவிதைகளுக்கு இணையாக, இன்னும் சொல்லப் போனால் புகழ்பெற்றுப் பரவிக் கொண்டிருக்கின்ற **Black Poetry** க்கு அடுத்தபடியாக அரபுக் கவிதைகள் பரவிற்று.

அதிலும் இரண்டுவிதம் இருக்கின்றது. வெளியே இருந்து பாடுகின்ற கவிஞர்கள் இருக்கின்றனர். கிட்டத்தட்ட எல்லோரும் வெளியே இருந்து பாடுகின்றார்கள் என்று



அப்துல் ரகுமான்

சொல்லமுடியாத அளவுக்கு, எல்லோருமே பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அளவுக்கு நிறையப்பேர் இருக்கின்றார்கள்.

கேள்வி:- ஈழத்தில் போராட்டக் கவிதைகள் மிக வலிமையானவை அவை உலகெங்கும் பரந்து செல்ல வேண்டும். அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமா?

பதில்:- இப்போது எடைபோட முடியாது. ஒரு பிரச்சினைக்கு ஆளாகி இருப்பவன், அந்த வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருப்பவன், அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றான்.

அப்படிப் பிரதிபலிக்கும்போது அது சிலவேளை நல்ல இலக்கியமாக இருக்கும் அல்லது சில வேளை இருக்கமாட்டாது. அது சரித்திர பூர்வமான ஒரு ஆவணமாகப் பயன்படமுடியும்.

அகரீதியாக இல்லை என்றபோதும், பிரச்சினையை நேரடியாகச் சொல்லும்போது அது ஆவணமாகப் பயன்படும்.

உதாரணமாகத் தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் இருக்கிறது. இதையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அதாவது, தலித் பிரச்சினை பற்றி மற்றவர்கள் எழுதுகின்ற கவிதைகள் மற்றது தலித்துக்களே அவர்களது பிரச்சினையைக் கவிதையாக எழுதுகின்றனர்.

இதில் தலித்துக்களின் கருத்து, தலித்துக்களின் பிரச்சினையைத் தலித்துக்களே எழுத வேண்டும் என்கின்றார்கள். அது ஒரு வகையில் நியாயம்தான்.

அவர்கள் பிரச்சினையை அவர்கள்தான் உணரமுடியும். ஆனாலும், பிரச்சினையை அனுபவித்தவன் முற்றுமுழுதாக படைப்பாளியாக முடியாது. சந்தர்ப்பம் போதாமல் இருக்கும். எனவே, அங்கு உயர் இலக்கியத்தை எதிர்பார்க்க முடியாமல் போனாலும் அவற்றைக் ஆவணமாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

கேள்வி:- உங்கள் கவிதைத் தொகுதிகளில் ஒன்றான 'மின்மினிகளால் கடிதம்' எனும் கவிதைத் தொகுதி என்ன நோக்கில் பாடப்பட்டது? சிலவேளைகளில் காதல் உணர்வு சார்ந்ததாகவும் தென்படுகின்றதே!

பதில்:- இல்லை. அது எந்தவொரு பெண் மீதும் பாடப்பட்ட, அல்லது என்னுடைய சுய அனுபவத்தின் மீது பாடப்பட்டதல்ல.

"ரசல்" கவிதைகள் என்று ஒரு வகைக் கவிதைகள் உண்டு. ரசல் உருது மொழியில் பிரபல்யம் பெற்ற கவிதைகள். அரபுவில் ஆரம்பித்து பாரசீகத்திற்குள் வந்து உருதுவில் மிகவளமாக உள்ளவை.

நெடுங்காலமாக என்னுடைய இலக்கிய வட்டம், என்னிடம் ரசல் கவிதைகளை எங்களுக்கு அறிமுகம் செய்வதால் என்ன என்று கேட்டார்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும், எனக்கும் தமிழில் புதிய வடிவ இணைவை ஏற்படுத்தியதாகவும் அமையும் என்பதாலும், அத்துடன்- எனது ஆன்மீக ஈடுபாட்டை வெளிப்படுத்தவும் உதவும் என்பதால் அவ்வாறு எழுதினேன்.

சூ.ஃபி இலக்கியத்தில் இறைவனைக் காதலியாகப் பாடும் வடிவம் ஒன்று உண்டு. அந்தப் பார்வை இக் கவிதை முறைக்கு உதவியது என்பதால், அவ்வப்போது எழுதியவை. இது பாக்கியாவில் தொடராக வந்தது. பின்னர் தொகுதிக்கு ஏற்ற விதத்தில் மாற்றி அமைத்து வெளியிட்டேன்.

வெறும் காதல் கவிதைகளோ அல்லது பெண்மீது பாடப்பட்டவையோ அவையல்ல. ○

## மனம் வாடுமுன்னே...

மாலையிலே உன்
வரவை எதிர்நோக்கி
மாலை தொடுத்து வைத்தேன்
அதில் ஏக்க
மனமும் எடுத்து வைத்தேன்

மலர்வாடும் முன்னே வராவிடினும்
என்
மனம்வாடும் முன்னே வருவாயா?

சாபத்தைப் போலத்
தழுவும் இருட்டிலோர்
தீபத்தை ஏற்றிவைத்தேன்
புலம்பும் என்
தாபத்தைத் தேற்றி வைத்தேன்

ஒளியணை யாமுன் வராவிடினும்
என்
உயிரணை யாமுன் வருவாயா?

-அப்துல் ரகுமான்

*(நேயர் விருப்பம் என்னும் தொகுதியிலிருந்து)*

# பாலையும் சோலையும்

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

**ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் சொக்கன். இவருடைய எழுத்துப்பணி அரை நூற்றாண்டுக்கு மேற்பட்டது. கல்விப் பணி நான்கு தசாப்பதங்கள் கண்டது. இவர் லண்டனில் இருந்த பொழுது 'இலக்கிய அன்பர்கள் சிலரின் தூண்டுதலால் தமது கல்வி, இலக்கிய அனுபவங்களை முதன்மையாகக் கொண்டு தமது வரலாற்றை எழுதினார். "பாலையும் சோலையும்" என்ற தலைப்பில் அமைந்த மேற்குறித்த நூலின் (கணினிப்பிரதி ) சில பகுதிகளை இங்கு தொடர்ச்சியாகத் தருகின்றோம்.**

### நுழைவாயில்

"பிறவா வரம் தாரும் பெம்மானே" என்ற இசைப்பாடல் வரி ஒன்று என் நினைவில் அடிக்கடி வந்து போவதுண்டு. 'பிறவிப் பெருங்கடல்' என்னும் பொய்யாமொழித் தொடரும் மனத்தை அடிக்கடி நெரிடும். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்', என்று மணிவாசகப் பெருந்தகை இறைவனுக்கு முறையிடுவதையும் நீள நினைந்து உருகிய சந்தர்ப்பங்களும் பலப்பல. 'என் வாழ்க்கையில் நிகழ்ந்த மிகத் துயரமான சம்பவம் நான் பிறந்ததுதான்' என்றான் பிரான்சின் சீரிய சிந்தனையாளன் ரூஸோ.

நெஞ்சிற் கவலை நெருஞ்சி முள்ளாய்க் குத்துகின்றவேளைகளில், தன்னை உருக்கி என் உடலைப் பெருக்க வைத்த என் தாயை மனக்கண் முன் நிறுத்தி, 'அம்மா, என்னை ஏன் பெற்றாய்?' என்று வினவுவதும் என் வழக்கம்.

ஏழு தசாப்தங்களையும் மேலும் இரண்டு ஆண்டுகளையும் கடந்து தொடர்ந்து கொண்டிருக்கும் எனது வாழ்க்கைப் பயணத்தில், எல்லாக் காலமும் பாலைப் பாழ் வெளியைத்தான் கடந்திருக்கிறேனா, என்ற வினாவினை நான் கிளர்த்தினால் 'இல்லை' என்ற பதிலே உடனடியாக வெளிப்படும்.

பாலையினிடையே பசுஞ் சோலைகளிலும் நான் தரித்திருக்கிறேன். அங்கு இளந்தென்றலில் சிலிர்த்ததும், மலர் மணத்தில் கிறங்கியதும், மரநிழலிலே இளைப்பாறியதும் சாசுவதமான உண்மைகளே. எனவே...

வாழ்வை முற்றாக உவர்த்து விரக்தியடையாத சராசரி மனிதனான நான், எனது வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளை, கண்ணீரையும் புன்னகையையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்ப்பட வைத்தவற்றை வாசகர்களாகிய *உங்களோடு பகிர்ந்து* கொள்ள விரும்பினேன். அந்த விருப்பத்தின் வெளிப்பாடே "பாலையும் சோலையும்" என்ற இந்தத் தன் வரலாற்று நூல்.

இது எனது வரலாற்றுச் சுருக்கம். "உன் வரலாற்றினை நீயே எழுத உனக்கு என்ன தகுதி? அத்துணைப் பெரியவனா நீ?" என்று சிலர் முணுமுணுப்பது, என் மனச்செவிகளில் வந்து அறைகிறது.

இவர்களுக்கு நான் இறுக்கும் பதில் இதுதான். "மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாறு அவன் உயர்வுக்குச் சாதகமாகவோ. அல்லது பாதகமாகவோ,



**கலாநிதி க.சொக்கலிங்கம்**
*(சொக்கன்)*

அவன் விரும்பியோ விரும்பாமலோ அமைந்துவிடலாம். அதனை நேரில் காண்பவரோ, அவனே எடுத்துரைக்கக் கேட்பவரோ அது கொண்டு சில படிப்பினைகளை, எச்சரிக்கைகளைப் பெறவாய்ப்புண்டாகுமல்லவா?"

இவற்றிற்காகவே இதனை எழுதுகிறேன். 'என்று வருவன் எமனென் றெதிர்நோக்கி நின்று தளர்கின்ற' முதியவனான நான், பொருளாதார வசதிகள் மிகவும் குறைந்த ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன்: என் வாழ்க்கையே ஓர் எதிர்நீச்சல்.

மாணவனாக, ஆசிரியனாக, விரிவுரையாளனாக, பாடசாலை முதல்வனாக நான் வளர்ந்ததற்கு, என் திறமைதான் காரணம் என்று கூறமாட்டேன். எனையாளும் ஈசனாகிய நல்லை முருகன்தான் நிமித்த காரணன்.

'உலகில் ஒருவர் உதவியும் இன்றி

அலகில் பல்துயர் அகத்திடை அடக்கித்

தன்னை வருத்தி என்னை வளர்த்த'

என் அன்னை முதற்காரணி. முருகனின் பிரதிநிதிகளாய், கண்கண்ட தெய்வங்களாய், ஆபத்பாந்தவர்களாய் அவ்வப்போது என் வாழ்விலே பங்குகொண்டு வழிகாட்டியும் துணைபுரிந்தும் வந்தோர் துணைக்காரணர்.

இவர்களுக்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு, நன்றிக் கடன் இத்துணைதாம் என்று எல்லைப் படுத்த், வரையறுக்க என்னால் இயலாது. இவர்களை மீளவும், நீளவும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தி அணிந்திடும் துதி மாலையாகவும் இந்த நூலைப் புனைந்திட முற்படுகின்றேன்.

தன் வரலாறென்பது அதனை எழுதுபவரின் புகைப்படமாக (photo) இருத்தல் கூடாது. ஏனெனில் புகைப்படத்திற்கென்றே தன்னில் இல்லாத அழகினை ஒப்பனைகள் மூலமும், கவர்ச்சியைத் தனது புன்னகை மூலமும் ஏற்படுத்த ஒருவன் முற்படுவது இயற்கையே. ஆனால் அந்த ஒப்பனையும் புன்னகையும் நிலையானவை அல்ல. போலியானவையுங்கூட. தன் வரலாறு நிழற்படம்போலப் புனைந்துரை அலங்காரங்களுக்கு இடமளிக்காது உண்மையே உரைத்தல் வேண்டும்.

இவ்வாறு உண்மைகளை உரைக்க முற்படுகையில் எதிர்பாராத சங்கடங்களில் மாட்டிக் கொள்ளவும் நேரிடலாம். உண்மை என்பது எப்பொழுதும் அமிர்தமாகவே சுவைக்கப்படும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அது சில சூழ்நிலைகளில், சிலருக்குக் கொடுவிடமாகவும் தோற்றலாம், உணரலாம், அஞ்சலாம், வெறுக்கலாம். இவை தவிர்க்க முடியாதவை.

இந்த வரலாறு என் குடும்ப வரலாறல்ல. எனது கற்றல் கற்பித்தல் அனுபவங்களோடும், எழுத்துலக அனுபவங்களோடும் தொடர்பானவற்றையே பெரும்பாலும் சுருக்கமாக எடுத்துரைப்பதே நோக்கம். இவற்றுள்ளும் நான் முதலிற் குறிப்பிட்டதுபோலப் பாலையும் பசுஞ் சோலையும், கண்ணீரும் புன்னகையும் கலந்தே வெளிப்படும் என்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது கற்றல், கற்பித்தல் அனுபவங்கள் மணிவிழாக் காலத்திற்கும் அப்பால் விரிந்து செல்பவை. இவை பற்றி எழுதுவது கல்வியுலகத்திற்குப் பயன்படலாம் என்பது என் சொந்தக் கருத்து.

ஆகவே...

என் வரலாறு இந்த வரையறைக்குள்ளேயே உலாப்போகும் என்ற தீர்மானத்துடன், எழுதத் தொடங்குகின்றேன். என் குல தெய்வம் நல்லை முருகன் காக்க.

(அடுத்தவாரம் தொடரும்.....)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## விழிப்புக்குப் பாராட்டு!

கிழக்கில் விடுதலைப் புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதாகவும், சிறுவர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதாகவும் - இராணுவப் புலனாய்வுத்துறை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளித்திருந்த தகவல்கள் - தவறானவை, பூதாகாரப்படுத்தப்பட்டவை என மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனைக் கூறியவர் வேறுயாருமல்ல. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே - மேற்படி விவகாரம் குறித்து - தனிப்பட்ட விசாரணையை மேற்கொண்டபோது - இது வெளிச்சத்துக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து - அலரி மாளிகையில் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் நடைபெற்ற உயர்படைத்துறை அதிகாரிகளுடனான சந்திப்பில் - இவ்வாறு தவறான கருத்துக்களை வழங்கிய இராணுவப் புலனாய்வுத் துறையினரை கடுமையான வார்த்தைகளால் கடிந்து கொண்டார் பிரதமர் ரணில்.

கிழக்கில் கடுமையான மழை பெய்துவரும்நிலையில், தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் நிறுத்தியிருக்கும்போது - இவ்வாறு தவறான தகவல் தரப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

அதேவேளை-இதையடுத்து நடந்த கூட்டமொன்றில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் - இராணுவப் புலனாய்வுத்துறையால் அரசாங்கம் ஆபத்துக்குள் சிக்கும் நிலை ஏற்படுவதாக எச்சரித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது இது முதன் முறையல்ல. யுத்தம் தணிந்து - புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னரும் அரசாங்கத்திற்கு தவறான தகவல்களை இராணுவத்தரப்பு பல தடவைகள் வழங்கியுள்ளது.

வெளிப்படையாகவே - உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் - இப்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே - 50,000 வீடுகள்வரை வெறுமையாக இருந்ததாக யாழ்.பிராந்திய இராணுவத் தலைமை தகவல் கொடுத்தது.

மற்றும் காஞ்சிரங்குடா, திருமலை, நெல்லியடியில் நடைபெற்ற தாக்குதல்கள் எனப் பல தடவைகளிலும் படைத்தரப்பு - அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த அறிக்கைகளும் தகவல்களும் - உண்மையை மறைப்பனவாகவே அமைந்திருந்தன.

இவ்வாறான திரிபுபடுத்தப்பட்ட அல்லது உண்மைக்கு மாறான தகவல்கள் அமைதி முயற்சிகளையும் பல தடவைகள் தீவிரமாகப் பாதித்தே வந்தன.

ஏனெனில்- படைத்தரப்புத் தகவல்களை நம்பிக்கைக்குரியதாகக் கொண்டே - இவ்விடயங்களில் அரசாங்கத்தின் எதிர்வினைகளும் இருந்தன.

இந்த எதிர்வினைகளே - மிகுந்த சிரமங்களின் மத்தியிலும் முன்னெடுக்கப்படும் சமாதானத்தின் பாதையில் தடைக்கற்களாகவும் பல தடவைகள் அமைந்தன. இவ்வாறானதொரு சூழல் - அரசாங்கத்தின் மீது நம்பிக்கையீனத்தை உருவாக்குவதாக அமைந்தது என்றால் அது மிகையல்ல என்றே கூறலாம்.

இந்தவகையில்- மறைமுகமாக அமைதி முயற்சிகளை பாதிக்கும் தன்மையானதாக, அரசாங்கத்தைத் தவறாக வழிநடத்துவதாக படைத்தரப்புத் தகவல்கள் இருந்தன. இன்று - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலேயே இவை வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றன.

கடந்த போர்க்காலங்களில் - களமுனைத் தோல்விகளையும், பின்னடைவுகளையும் - வெற்றிகளாகவும், முன்னேற்றங்களாகவும் பிரகடனப்படுத்திய 'பழக்கதோஷம்'- இன்று அமைதிக்காலத்திலும் தொடரும் தகவல் யுத்தமாக நோக்கப்பட்டு - பொறுப்பற்றதனமான, பொய்யான தகவல்களைக் கொண்டு சேர்ப்பதாகவே இராணுவத்தின் புலனாய்வுத்துறைச் செயற்பாடு அமைந்திருக்கின்றது.

அன்றைய அரசாங்கமும் தனது அரசியல் ஆதாயத்துக்காக - இராணுவத்தின் தவறான புள்ளிவிபரங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

'இரண்டு கள்ளர்களும் சேர்ந்தாற்போல்' - ஒருவர் குறையை மற்றவர் மறைக்கவும் அது துணையாகிற்று.

அவ்வாறானதொரு சம்பவமே - அண்மையில் தெற்கில் புயலைக் கிளப்பிவரும் 'காணாமற்போன படையினர்' பிரச்சினையுமாகும்.

யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரை, அவர்களது சடலங்களைக்கூடப் பொறுப்பெடுக்காமல் - 'காணாமற்போனவர்களாக' அறிவித்து அன்று தப்பித்துக் கொண்டார்கள் - இன்று - விடுதலைப் புலிகள் நடந்ததை உலகிற்குச் சொன்னதும், அகப்பட்டுக்கொண்ட கதையும் இந்த வகையானதே.

ஆனால்- இன்று சற்றே வேறுபட்டதாக இன்றைய அரசாங்கம் - விழிப்படைந்து - உண்மை மறைக்கப்பட்டதைக் கண்டித்திருக்கிறது.

இதற்காக- பிரதமர் ரணிலைப் பாராட்டலாம். அதேவேளை- இப்பாராட்டோடு, தொடர்ந்தும் இது போன்ற விடயங்களில் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவுமிருந்து சமாதானத்திற்கு விரோதமான சக்திகளின் செயற்பாடுகளைக் கருத்திலெடுத்து, அமைதியைக் காத்துகொள்ள அவர் முயற்சியெடுக்க வேண்டுமென்பதை தமிழர் தரப்பிலிருந்து சுட்டிக்காட்டவும் முடியும்.

# இலங்கைக்கு விஜயம் செய்ததன் மூலம் இங்குள்ள நிலவரத்தை அறிய முடிந்தது

## என்கிறார் ஜப்பானிய விசேட தூதர் யசுஷி அகாஷி

இலங்கைக்கு நேரடி விஜயம் செய்ததன் மூலம் அரசாங்கமும் புலிகளும் மேற்கொண்டுள்ள சமாதான, நடவடிக்கைகள் மற்றும் வட,கிழக்கு உட்பட பல்வேறு பகுதிகளின் நிலவரங்கள் குறித்து தெளிவு ஏற்பட்டுள்ளதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் மீது சர்வதேச சமுகம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும்,

அரசும் புலிகளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான ஆதரவை சர்வதேச நாடுகள் வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, அவசர மனிதாபிமான புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக இறுதி அறிக்கை ஏப்ரல் மாதத்துக்குள் தயாரிக்கப்பட்டுவிடும். அந்த அறிக்கைக்கு அமையவே, மே மாதத்தில் நடைபெறும் மாநாட்டில், இலங்கைக்கான உதவிகள் குறித்து உதவி வழங்கும் நாடுகள் தீர்மானிக்கும் என்றும் ஜப்பானிய விசேட் தூதுவர் யசுஷி அகாஷி மேலும் தெரிவித்தார்.

# கற்பித்தலுடன் ஆசிரியர்கள் நின்றுவிடாமல் நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

## கல்வியியல் கல்லூரி திறப்புவிழாவில் அருண் மாஸ்ரர்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் கலை, பண்பாடு, கலாசாரத்திற்கு ஏற்றவாறு உலக அறிவியலை மிஞ்சுகின்ற அளவிற்கு, அறிவியல் கூடங்கள் , அறிவியல் சிந்தனைக் கூடங்கள் எமது தாயக மண்ணிலே அமைக்கப்படும் என்று, தமிழீழ கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இறைமாட்சி வைபவத்தில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கும்போதே, அருண் மாஸ்ரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது மண்ணிற்கு துன்பங்கள், துயரங்கள், சோகங்கள் நிறைய உண்டு. அவற்றையெல்லாம் கல்லூரிக் கல்வியுடன் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். எமது துன்ப வரலாற்றுப் பாதையை இளம் சமுதாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், சில சம்பவங்களை நாங்கள் மறந்துவிட முடியாது. தமிழ் மக்கள் இந்த மண்ணிலே நிம்மதியாய் வாழ வேண்டுமானால், எமக்கு நேர்ந்த துன்ப துயரங்களை அவர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும்.

யாழ். பொதுநூலகம் வெள்ளையடித்து கம்பீரமாகத் தெரியலாம். அழகுபடுத்தலாம். ஆனால், நூல்நிலையத்தில் எரிக்கப்பட்ட நூல்கள் யாராலும் மீட்டுத்தர முடியாதவை. அத்துடன் அந்த துயரத்தை யாரும் மறக்க முடியாது. இதே போல எத்தனையோ துன்ப துயரங்களை எமது இனம் தாங்கி இன்று நிமிர்ந்து நிற்கின்றோம்.

துன்ப துயரங்கள் எங்களைத் தொடர்ந்து வராமல் இருக்க வேண்டுமானால், எமது வரலாற்றுப் பாதையை எதிர்கால சந்ததியினருக்கு கற்பிக்க வேண்டும்.

எமது வருங்காலச் சிறுவர்கள் விழிப்பாக இருக்க வேணடும். எமது மண்மீட்பு மட்டுமல்ல, மீட்கப்படுகின்ற மண்ணை சரியான முறையிலே பாதுகாக்க, நல்ல சிந்தனையுள்ளவர்களாக கடும் உழைப்பு உள்ளவர்களாக மிளிர வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் கற்பித்தலுடன் மட்டும் நிற்காது, நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க, சமூகப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று உள்ள நல்ல குழந்தைகளை வளர்த்தெடுக்க தங்களை ஒவ்வொரு ஆசிரியரும் அர்ப்பணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(கி,ச,60)

# சிங்கக்கொடி உயர்த்தியபடி வடக்குக்கு வருவோம்!

## 'சிஹல உறுமய' சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கிற்குச் சிங்கக்கொடியை உயர்த்தியபடியே வருவோம் என்று சிஹல உறுமயவைச் சேர்ந்த சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற திருமண வைபவமொன்றில், அரசாங்க அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் போன்றோர் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்த நேரத்தில், அமைச்சர் மகேஸ்வரன் சம்பிக்க ரணவக்கவைப்பார்த்து, "ஒவ்வொரு நாளும் நீங்கள் வடக்கைப்பற்றி விமர்சிக்கிறீர்கள். ஒரு தரம் யாழ்ப்பாணத்துக்கு வந்து பாருங்கள்." என்று கூறியதை அடுத்தே,

சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த சம்பிக்க மேற்கண்டவாறு தெரிவித்தாராம்.

(க)

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் விடுதியைப் பொலிஸார் முற்றுகை

## 11 சிறுவர்கள் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பில் வீடொன்றில் இயங்கிவந்த, சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும் விடுதி ஒன்றைப் பொலிஸார் கண்டு பிடித்தனர்.

சிறுவர்களை வெளிநாட்டவர்களுக்கு பாலியல் துஷ்பிரயோகத்துக்காக விற்பனை செய்யும் இந்த விடுதியிலிருந்து, 11 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பொலிஸாரால் மருத்துவப் பரிசோதனைகளுக்காக சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மருத்துவப் பரிசோதனையின்போது, எட்டுச் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் மேலும் பல சிறுவர் பாலியல் துஷ்பிரயோக விடுதிகள் இயங்கி வருவதாகவும், இவற்றைக் கண்டு பிடித்து இத்தகைய விடுதிகளை நடத்துவோரைக் கைதுசெய்யும் முயற்சிகளில் பொலிஸார் இறங்கியுள்ளதாகவும் சிறுவர் மற்றும் பெணகளுக்கான பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சிசில் பெரேரா தெரிவித்தார்.

# உலகவங்கி வழங்கும் நிதியுதவிகள் அரசு மீளச் செலுத்த வேண்டும்

## தெற்காசியத் துணைத் தலைவர் மீகோ நிஷிமிசு தெரிவிப்பு

(கொழும்பு)

வட - கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக உலகவங்கியால் வழங்கப்படும் நிதியுதவிகளை அரசாங்கம் மீளச் செலுத்த வேண்டும் என, உலகவங்கியின் தெற்காசியப் பிராந்தியத் துணைத்தலைவர் மீகோ நிஷிமிசு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வட,கிழக்குப் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக உலக வங்கி பெருமளவிலான நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளது. இந்த நிதியுதவிகளை இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் மீளச் செலுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளை அரசாங்கம் அங்கீகரிக்கும்போது, அவர்களூடாக நிதியுதவிகளை வழங்குவதில் எந்தப் பிரச்சினைகளும் இருக்காது.

இலங்கை மக்கள் அனைவரும் சமாதானத்தை விரும்புகிறார்கள். மக்கள் மத்தியில் அமைதி முயற்சிகள் குறித்த தகவல்கள் குறைவாகவே சென்றடைந்திருக்கின்றன. இதை அரசாங்கம் விரைவுபடுத்தி மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த கருத்துக்களை அதிகமாகப் பரப்பவேண்டும்.

சமாதானம் குறித்த கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு உலக வங்கி சகல ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் வழங்கும். இத்தகைய கருத்துக்கள்மூலம் இலங்கையில் சமாதானத்தை வலுப்படுத்த முடியும்.

நாட்டில் அமைதிநிலை தோற்றுவிக்கப்பட்டால்தான், இலங்கையை வளப்படுத்த முடியும் என, உலகவங்கியின் தெற்காசியப் பிராந்தியத் துணைத் தலைவர் மீகோ நிஷிமிசு மேலும் தெரிவத்தார்.

# தமிழ்த்தினப் போட்டிகளில் இசை நாடகங்கள் சரியான தேர்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை

ஈழத்தின் இசை நாடக வரலாற்றில் நடிகமணி V.V.வைரமுத்துவுடன் இணைந்து செயற்பட்டும், இன்றும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் விரல்விட்டு எண்ணத்தக்க இசைநாடகக் கலைஞர்களில் 'கலைவேந்தன்' தைரியநா தனும் ஒருவர். இவர் சிறந்த இசை நாடக நடிகனாகவும், நெறியாளனாக வும் இருப்பதுடன், சிறந்த ஒப்பனையாளனாகவுமுள்ளார். திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞராகிய இவர் எமது சமூகத்தால் பேணப் படவேண்டிய மரபுக்கலைஞன் ஆவார். இவருடனான நேர்காணல் இது.

*கேள்வி:-* நீங்கள் நாடகத்துறை யில் ஈடுபடுவதற்குத் தூண்டுகோலாக இருந்த காரணிகள் எவை?

*பதில்:-* ஆரம்பத்தில் சினிமாப் பக்திப்பாடல்களை விருப்போடு பாடு வது வழக்கம். என்னிலிருந்த இயல் பான சாரீரவளம் எல்லோரையும் கவர்ந் தது. கந்தரோடை ஸ்கந்தவரோத யக் கல்லூரியில் படிக்கும்போதே பாடசாலை விழாக்களிலும், வை வங்களிலும் என்னைப் பாடச்சொல் வார்கள்.

இவ்வாறு வளர்ந்த என்னுடைய ஆர்வத்துக்கு ஒரு சங்கீத ஒழுங்கை ஏற்படுத்தித் தந்தவர் சுன்னாகம் கோபாலரட்ணம் என்பவர். இவ்வாறு எனது இத்துறை சார்ந்த வளர்ச்சி இருக்கின்றபோது, நாடகத்துறை சார்ந்த ஆர்வம் எமது சுன்னாகம் அந்தோனியார் ஆலயப் பங்குத் குரு வாக அப்போது இருந்த மரிய சேவி யர் அடிகளின் முயற்சியினால் ஆரம் பித்தது எனலாம்.

எனக்குப் பன்னிரண்டு வயது நடக்கின்றபோது மரியசேவியர் அடி களின் "ஆதாம் ஏவாள்" நாடகத்தில் ஏவாளாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அவரது திருப்பாடுகளின் காட்சி (Passion Play) நாடகங்களிலும் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருட மும் பங்கேற்றுக் கொள்வேன். அதே வேளை கோபாலரட்ணத்தின் நாடகக் குழுவுடன் இணைந்து இசைநாடகப் பாடல்களைப் பழகும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

அவ்வாறு பழக்கப்பட்ட எனது இசையனுபவம் அச்சுவேலி மார்க் கண்டு குழுவினரின் நாடகமாகிய "சம்பூரண அரிச்சந்திரா"வில் முன் சந்திரமதியாக நடித்த நடிகர் வராத காரணத்தினால் திடீரென நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது எனக்கு மிகுந்த வரவேற்பைப் பெற்றுத் தந்த துடன், இசை நாடகத்துறைக்குள் நான் தீவிரமாக ஈடுபடுவதற்கு முதற் களமாகவும் அமைந்தது.

இதிலே எனது திறமையை இர சித்த வசாவிளான் மார்க்கண்டுவின் ஊக்கத்தினால் நடிகமணி வைரமுத்து என்னை அழைத்து தனது நாடக குழுவில் ஒருவனாக (1969) சேர்த் துக் கொண்டார். அன்றுமுதல் அவ ரது காங்கேசன்துறை "வசந்த கான சபா"வில் முக்கிய பெண் பாத்திரம் ஏற்று நடிக்கும் நடிகனாக மாறி னேன். அன்றிலிருந்து இன்றுவரை




நடித்துக் கொண்டும், நாடகம் பழக் கிக் கொண்டும் நாடகத்துறைக்குள் ளேயே இருக்கின்றேன்.

*கேள்வி:-* நடிகமணி வைரமுத்து வுடன் இணைந்து நீண்ட காலம் பணியாற்றியுள்ளீர்கள். இவ்வாறு பணியாற்றும்போது எவ்வகையான அனுபவங்களைப் பெற்றீர்கள் என்று கூறமுடியுமா?

*பதில்:-* நடிகமணி வைரமுத்துவு டன இணைந்து பல நாடகங்களை நடித்தேன். அதிகம் பெண் பாத்திரங் களிலும், அதேவேளையில் ஆண் பாத்திரங்களிலும் நடித்தேன். குறிப் பாக சங்கரதாஸ் சுவாமிகளின் நவ ரச நாடகங்கங்களே வசந்தகான சபாவினால் மேடையேற்றப்பட்டது. இந்நாடகங்களுக்கூடாக இசை நாட கத்தின் சகல நுட்பங்களையும் இராக, தாள, லய நேர்த்திகளையும் சிறப் பாக உள்வாங்கிக் கொண்டேன் எனலாம்.

அதேவேளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் இந்த இசை நாடகத்தைப் பிரபல்யமான தாக்கி, இலங்கை முழுவதிலும் கொண்டு சென்று மேடை ஏற்றச் செய்தார். இதனால் பேராசிரியர் தொடக்கம் சான, கே.எம்.வாசகர் என்று பல வானொலி கலைஞர்களு டனும், அரங்கியல் நிபுணர்களுட னும் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக்கிடைத்தது. அவர்களிடமி ருந்தும் பலதைக் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. காரணம் பல நாடகங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

*கேள்வி:-* திருமறைக் கலாமன் றத்தின் நிர்வாக உறுப்பினராகவும், மூத்த கலைஞராகவும் மிக நீண்ட காலம் செயற்பட்டு வருகிறீர்கள். இது தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியுமா?

*பதில்:-* பன்னிரண்டு வயதிலி ருந்தே மரியசேவியர் அடிகளின் பிர தான சீடன்போல் இணைந்து கொண் டேன். அன்றிலிருந்து இன்றுவரை இதன் அனைத்துப் பணிகளிலும் முழு மையாகச் செயற்பட்டு வருகிறேன். நாடகம் பற்றிய பல நவீன நுட்பங் களை மரியசேவியர் அடிகளிடமி ருந்தே பெற்றேன் எனலாம். மன் றத்தினால் மேடை ஏற்றப்படும் திருப்பாடுகளின் காட்சிகள், இலக்கிய நாடகங்கள், நவீன நாடகங்கள், வானொலி, தொலைக்காட்சி (ரூபவா ஹினி) வரை அனைத்திலும் நடித் துள்ளேன்.

இம்மன்றத்தின் இசைநாடகப் பிரிவின் பொறுப்பாளராக இருந்து பல நாடகங்களை நெறிப்படுத்தியும் வந்துள்ளேன். அதுமட்டுமன்றி இந் தியா, ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், கொலண்ட், சுவிற்சர்லாந்து போன்ற பிற நாடுகளுக்கும் கலைப்பயணத்தில் சென்று எனது ஆற்றல்களை வெளிப் படுத்தி பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளேன்.

*கேள்வி:-* தங்களின் கலைத் துறைக்குக் கிடைத்த பாராட்டுக்கள், கௌரவங்கள் பற்றிக்கூறமுடியுமா?

*பதில்:-* 1970ஆம் ஆண்டு நெல் லண்டை பத்திரகாளி அம்மன் கோவி லில ஆசிரியர் அண்ணாச்சாமியினால் "நடிப்பிசைச் செல்வன்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட் டேன். 1993இல் திருமறைக்கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகளினால் "கலைவேந்தன்," என்னும் பட்டமும், 1998இல் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகத்தினால் மூத்த இசைநாடகக் கலைஞர் என்று முடி சூடியும், 2001இல் சுன்னாகம் அந் தோனியார் இளைஞர் மன்றத்தால் "நவரசவள்ளல்" என்ற பட்டமும், அதே ஆண்டு வடக்குக்கிழக்கு தமிழ் விவ காரங்கள் அமைச்சினால் "கலைஞான கேசரி" என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டேன். அதனோடு ஐரோப்பாவிலும் பல அரங்குகளில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டேன்.

*கேள்வி:-* தற்போது இசை நாட கத்துறையில் இருக்கின்ற தகமை வாய்ந்த ஓரிருவரில் தாங்களும் ஒரு வர். இசைநாடகக்கலையை வளர்த் தெடுப்பதற்குத் தாங்கள் தற்போது ஆற்றும் பணிகள் பற்றிக் கூறமுடி யுமா?

*பதில்:-* திருமறைக் கலாமன்றத் தில் பல இளைஞர்களுக்கு இசை நாடகத்தைப் பழக்கி வருகின்றேன். பாடசாலைமட்டத் தமிழ்மொழித் தினப்போட்டிகளுக்காகப் பல பாட சாலைகளில் மாணவர்களுக்கு இதனை பழக்கி வருகின்றேன். மற் றும் சனசமூகநிலையங்கள், சந்தர்ப் பம் கிடைக்கின்ற எல்லா இடங்களி லும் என்னால் இயன்ற முயற்சி களை மேற்கொண்டு வருகின்றேன்.

ஏன், பல்கலைக்கழகம் முதலாக கலாநிதி பாலசுந்தரம் அவர்களினூ டாக நாட்டார் வழக்கியல் கலைக் கழகத்துக்கு "சத்தியவான் சாவித் திரி" என்னும் இசை நாடகத்தைப் பழக்கினேன். ஆனால், எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும் இசை நாடகத்துறையில் ஆர்வமும், ஆற் றலுமிக்க இளைஞர்களைக் கண்டு பிடிப்பது அரிதாகவே உள்ளது.

ஆனால், நான் எனது குடும்பத்தில் அனைவரையும் பயிற்றுவித்து, இத் துறையில் ஈடுபடுத்தி வருகிறேன்.

*கேள்வி:-* நீங்கள் தொடர்ச்சியாக நாடகத்துறையில் ஈடுபட்டு வருகிறீர் கள். இதற்கு உங்கள் குடும்பத்தில் ஆதரவு எவ்வாறு உள்ளது?

*பதில்:-* என்னுடைய மனைவியே எனக்குப் பிரதான ஊக்குவிப்பாளர் எனலாம். எனது பிள்ளைகள் அனை வருமே இத்துறையில் என்னுடன்


M.தைரியநாதன்

இணைந்து திருமறைக் கலாமன்றத் தின் ஊடாகப் பணியாற்றி வருகின் றார்கள். அவர்கள் கலையில் ஆர் வம் செலுத்தும் அதேவேளையில், கல்வியிலும் குறைந்துவிடவில்லை. என்னுடைய இருபிள்ளைகள் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றனர். அந்தளவுக்குக் கலை- கல்விக்கு ஊக்கமாக இருக்கின்றது.

*கேள்வி:-* தற்போது யாழ்ப்பா ணத்தில் இசைநாடகத்துறை எந்நி லையிலுள்ளது என்று கருகிறீர்கள்?

*பதில்:-* என்னைப்போல் ஒரு சிலரே இத்துறையில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். வளர்ச்சி பெறவேண் டிய மாணவ சமூகத்தில் இதுசரி யாக ஊக்குவிக்கப்படுவதில்லை, முன்மாதிரி காட்டப்படுவதுமில்லை. உதாரணமாகத் தமிழ்த்தினப்போட் டிகளில் இசை நாடகங்கள் சரியான தேர்வுக்கு உட்படுத்தப்படுவதுமில்லை, அது சம்பந்தப்பட்டவர்களும் அக்க றையாகச் செயற்படுவதுமில்லை. இவையெல்லாம் இசைநாடக வளர்ச் சிக்குத் தடைக்கற்களாகவே இருக் கின்றன.

*நேர்காணல்:*
எஸ்.சாந்தகுமார்

# புதிய கல்விச்சீர்திருத்த கட்டமைப்பில் வலுப்பெறும் "ஆலோசனையும் வழிகாட்டலும்" என்ற எண்ணக்கரு

**வ**ளர்ந்துவரும் உலக மாற்றங் களுக்கு இணங்க எமது நாடும் சமச்சீரான பாதையில் செல்லவேண் டியது தவிர்க்க முடியாத செயற்பா டாக அமைந்துள்ளது. உலகச் செல்செறிகளுக்கு ஏற்பவும், அவற்றை தன்மயப்படுத்தி அவற்றினூடாக எம்மை மேம்படுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது. ஒரு நாட்டின் விருத்திக்கும், மனிதகுல மேம்பாட் டிற்கும் அடித்தளமாக விளங்குவது கல்வி என்ற கட்டமைப்பாகும்.

கல்விச் செயற்பரிமாணம் ஊடாக மனிதனின் அறிகை மேம்பாடு, இயக் கத்திறனியல் விருத்தி, உளப்பாங்கு ரீதியான விருத்தி, மொழிசார் கையா ளுகை மேம்பாடு, சமூக இசைவு விருத்தி என்ற அம்சங்களைக் கட்டி யெழுப்பி ஆளுமை மேம்பாடு என்ற முழுமைத் தன்மையை ஒரு தனி யன் ரீதியாக விளைவித்து, வள மான தனியனை உருவாக்குவதுடன் வளமான சமூகக் கட்டமைப்பையே விருத்தி செய்து கொள்ளலாம்.

காலமாறுதல்களுக்கு ஏற்பவும், விருத்திய நோக்கிய செல்நெறிப் பாதைகளின் மாறுதல்களுக்கு இணங் கவும், கல்வி அமைப்பில் வரலாற்றுக் காலம் தொட்டு புதிய விடயங்களை உள்வாங்குதல், இருக்கின்ற கருத் தியல் ,சிந்தனைகளை மாற்றியமைத் தல் என்ற அடிப்படையில் கல்விசார் மறுசீரமைப்புக் கொள்கை அமுலாக் கம் நடைபெற்றுவருகின்றது. இத் தன்மையின் பாங்கில் 1998 இல் நவீன கல்வி மறுசீரமைப்பில் கற்றல்- கற்பித்தல் முறைமைகள், கலைத் திட்ட வடிவமைப்பு, பாடசாலைக் கட் டமைப்புக்கள், மதிப்பீடு - கணிப் பீட்டு முறைமைகள், பௌதீக வளங் கள், இணைபாடவிதானம், கல்வித் திணைக்கள அணுகுமுறை, சமுதா யத்திற்கும் - பாடசாலைகளுக்குமி டையிலான வலுவான பிணைப்பு, ஆசிரியர்சார் வாண்மைத்துவ மேம் பாட்டுத் திட்டங்கள் என்ற பல்பரி மாண நோக்கில் புதிய விரிவாக்கம் இடம்பெறுவதை நாம் அவதானிக்க லாம்.

புதிய கல்விக் கட்டமைப்பின் பிரகாரம் விசேட செயற்பாட்டு அம் சங்களில் ஒன்றாக ஆலோசனையும் வழிகாட்டலும் என்ற எண்ணக்கரு விளங்குகின்றது. இச்செயற்பரிமா ணம் ஊடாக கற்போனின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் ஓர் சீரான பாதையை ஏற்படுத்தித் தனியாள் மேம்பாடு ஊடாக சமூகம் சார் விருத்திக்கு வழிகாட்டும் மிகப் பெரிய தொடர்செயற்பாடு இடம்பெறு கின்றது.

வழிகாட்டல் என்பது பெற்றோர், ஆசிரியர், சமூக அங்கத்தவர் என்ற அடிப்படையில் இடம்பெற வாய்ப் புண்டு. புத்திமதி என்பது வழிகாட்டல் அல்ல. இருந்தபோதும் அதனூடாக வழிகாட்டலின் சில நோக்கங்களை நிறைவேற்றவே செய்கின்றன. வழி



காட்டல் என்பது ஒரு நபரை சுயமாக இயங்கச் செய்யவும், தானாகவே தீர்மானங்களை மேற்கொள்ளச் செய்யவும் ஆற்றலைப் பெறச் செய் தல் ஆகும். ஓர் நபர் தனது பிரச்சி னைகளுக்குத் தீர்வினைக் காணவும், தன்னால் எடுக்கப்பட்ட ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ளச் செய்யவும் உதவு தல் ஆகும். ஆலோசகரது முயற்சி யாதெனில் ஒரு பிள்ளையினது தன்மை பற்றியும், நிலைமையைப் பற்றியும் கிரகித்து வைத்துள்ளதை (Perception) கொண்டு ஒரு விவேக மான தீர்மானத்தைச் சாத்தியப்ப டும் வகையில் எடுத்தல் மிகவும் முக்கியமான விடயமாகும்.

ஒரு நபருக்கு அவரைப் பற்றியும், அவரின் நிலைமையைப் பற்றியும் அதிக தகவலை வழங்குவதன் ஊடாக இச்செயற்பாடு நிறைவேற் றப்படுகின்றது. இதன் மூலமாக இறு தியில் அந்நபர் சரியான பரிமாணத் தில் பிரச்சினையை எதிர்நோக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு பிள் ளை சுயமாக இயங்கவும், சுயமாகச் செயற்படவும் உதவும் ஒரு அபிவி ருத்திச் செயற்பாடாக வழிகாட்டல் ஆலோசனை என்ற எண்ணக்கரு அமைகின்றது. வாழ்நாள் முழுவதும் ஒரு பிள்ளை முகங்கொடுக்கின்ற, அதிலும் விசேடமாக விருத்தியடை யும் பருவத்தின் சில முக்கிய கட் டங்களில் கல்வி, தொழில் மற்றும் தனிப்பட்ட, சமூகரீதியான பிரச்சினை களை மாணவர்கள் தீர்த்துக் கொள் வதற்கு உதவுகின்ற இசைவாக்கச் செயற்பாடாக இதனைக் குறிப்பிட வும் முடியும்.

நவீன கல்விச்சீரமைப்பின் தன் மையில் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு வழிகாட்டல் பணியாளர் ஆவார். அவர் கல்வி வழிகாட்டல் அம்சங் களை விருத்திசெய்து அதன்படி தனது செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் தனிப்பட்ட விருத்தியில் கவனம் செலுத்துவதோடு, சமூகத்திற்குப் பயன்படும் வகையிலும், சமூகத்துடன் பொருந்தும் அடிப்படையிலும் வழிப் படுத்தல் அவசியம்.

ப.இராஜேஸ்வரன்
*யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி*

ஆசிரியர் வகுப்பறையில் உரு வாக்கிக் கொள்ளும் ஒத்துணர்வு அம்மாணவர்களைச் சிறந்தமுறையில் கற்கவும், சிறந்த ஆளுமையுள்ள மனிதனாக மிளிரவும் உதவுகின்றது. பிள்ளைசார் ஆளுமைக் கூறுக்களை விருத்திசெய்து ஒரு முழுமையான பிரஜையாகச் சமூகத்தில் விளங்கச் செய்ய ஆசிரியரின் பங்கு மிகப்பெரி யது. ஆசிரியர் என்பது வழிகாட்டுநர் என்ற கருத்தைக் கொண்டமைந்தது.

(நாளை தொடரும்)

# இன்னமும் ஒரு வாரமேயுள்ளது ஈராக் ஒத்துழைக்க வேண்டும்

## ஐ.நா.ஆயுத்க் கண்காணிப்பாளர் எச்சரிக்கை


ஹான்ஸ் பிளிக்சும், மொஹமட் எல்பார்ட்டியும்

ஈராக் இன்னமும் எங்களுடன் அதிகமாக ஒத்துழைக்க வேண்டும். போரைத் தவிர்க்கவும் இதுவே இறுதிச்சந்தர்ப்பமாக அமையும் என ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஹான்ஸ் பிளிக்சும், மொஹமட் எல் பார்ட்டியும் அறிவித்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், வரும் 27 ஆம் திகதியன்று ஆயுதக் கண்காணிப்புக்குழு தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க முன்பு- ஈராக் தனது இறுதி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள் வேண்டும் என எச்சரித்தனர்.


ஈராக்கில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட இரசாயன ஆயுதங்களின் வெற்றுக்கோதுகள் மற்றும் ஆவணங்கள், அணுவாயுத உற்பத்திக்கான சான்றுகளாக அமைவதாக- ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால், ஈராக் இதனை மறுத்ததோடு இது எவ்வகையிலும் அணுவாயுத உற்பத்தியோடு தொடர்பற்றது எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 50,000க்கும் அதிகமான பொதுமக்கள் வொஷிங்ரனில் நடாத்திய ஈராக் மீதான போருக்கான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, சான் பிரான்சிஸ்கோ, லண்டன், ரோக்கியோ, மொஸ்கோ, பெய்ரூட், புவனஸ் அயர்ஸ் வரை. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாளுக்கு நாள் வலுத்துவருகின்றன.

### அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ் புஷ்ஷின்

# தனிப்பட்ட வாசஸ்தலத்தில் தரையிறங்கிய ஹெலிகொப்டர்


புஷ்ஷின் தனிப்பட்ட விமானம்

அமெரிக்க ஜனாதிபதி ஓய்வுக்கெனத் தங்கியிருக்கும் வாசஸ்தலமருகேயுள்ள விமான நிலையத்தில் திடீரெனத் தரையிறங்கிய ஹெலிகொப்டரினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேரிலாண்ட் மாநிலத்திலுள்ள காம்ப் டேவிட் ஓய்வு இல்லத்துக்குள்ளே - ஜனாதிபதியின் பிரத்தியேக பாவனைக்கான விமான தளத்திலேயே - சுவீடிஷ் நாட்டு விமானமோட்டி ஒருவர் செலுத்தி வந்த ஹெலிகொப்டர், திடீரெனத் தரையிறங்கியது.ஜனாதிபதி புஷ்ஷின் 'எயர் .'.போர்ஸ் -01' என்ற விசேட விமானம் இத்தளத்திலேயே தரித்து நிற்பது வழமையாகும்.

குறிப்பிட்ட விமானத்தளத்திலிருந்து 10 மைல்கள் தள்ளியுள்ள இண்டியன் ஹெட் விமானத்தளத்தில் தரையிறங்க வேண்டிய ஹெலிகொப்டரே அங்கு தரையிறங்க முடியாமற் போனதால் புஷ்ஷின் பிரத்தியேக விமானத் தளத்தில் தரையிறங்கியதாகக் கூறப்படுகின்றது.

# கொலம்பியாவில் வன்முறை பதினாறு பொதுமக்கள் பலி

## யார் கொன்றார்கள் என்பது மர்மம்

(பொகொடா)

கொலம்பியாவின் வடக்கிலுள்ள அன்ரியோகுவா மாநிலத்தில் இனந்தெரியாதோர் நடாத்திய தாக்குதலில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் அதிகமாகி வருகின்றது.

கொலம்பியப்படையினர், வலதுசாரி ஆயுதக்குழுவினர், கொலம்பிய புரட்சிகர இராணுவம் ஆகிய முத்தரப்புக்களுக்கும் இடையே தொடர்ந்து வரும் போரில், இப்படுகொலைச்சம்பவம் யாரால் நிகழ்த்தப்பட்டது என்பது பற்றிய மர்மம் இதுவரை தெளிவாகவில்லை.

ஒவ்வொரு பகுதியினரும் தத்தமக்கு எதிரான பகுதியினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துவது அண்மைக் காலமாக அதிகரித்து வருவதால், இப்படுகொலைக்குக் காரணமானவர்கள் யாரென்பது விரைவில் தெரிந்துவிடுமென நம்பப்படுகின்றது.

படுகொலையானவர்களில் 70 வயது வயோதிபர், இரண்டு கர்ப்பிணிகள், மூன்று சிறுவர்கள் அடங்குவர் என கொலம்பியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வி.பி. முக்கோணப் போட்டித் தொடரில் இங்கிலாந்தை அவுஸ்ரேலியா வென்றது


வெற்றி மகிழ்ச்சியில் அவுஸ்ரேலியா


அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் அடிலெய்ட்டில் நேற்று நடைபெற்ற பரபரப்பான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா நான்கு விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. இங்கிலாந்து அணி வீரர்களால் 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இங்கிலாந்து வீரர் கொலிங்வூட் ஆட்டமிழக்காமல் 106 பந்துகளில் 63 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் துடுபபாட்டத்தில் பிரகாசிக்கவில்லை.

அவுஸ்திரேலிய அணி தரப்பில் பிறக்கன் 3 விக்கட்டுக்களையும் வற்சன், ஹொக் ஆகியோர் தலா இரண்டு விக்கட்டுக்களையும் வில்லியம்ஸ், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 47.3 ஓவர்களில் ஆறு விக்கட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. மார்ட்டின் 59 ஓட்டங்களையும், பெவன் 30 ஓட்டங்களையும்,கிளார்க் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.இங்கிலாந்து அணியின்-பந்து வீச்சாளர் பிளாகவெல் 3 விக்கட்டுக்களைச் சாய்த்தார்.



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003

## முதல் சுற்றுப் போட்டிகளின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| பெப்.9 | தென்னாபிரிக்கா | எதிர் மேற்.தீவுகள் | கேப்ரவுண் - பகல்/இரவு |
| பெப்.10 | இலங்கை | எதிர் நியூசிலாந்து | புலொயம்பொன்டீன் - பகல் |
| பெப்.10 | சிம்பாப்வே | எதிர் நமீபியா | ஹராரே - பகல் |
| பெப்.11 | அவுஸ்திரேலியா | எதிர் பாக். | ஜொகன்னஸ்பர்க் -பகல்/இரவு |
| பெப்.11 | பங்களாதேஷ் | எதிர் கனடா | டேர்பன் -பகல்/இரவு |
| பெப்.12 | தென்னாபிரிக்கா | எதிர் கென்யா | பொச்செப்ஸட்ரோம் -பகல் |
| பெப்.12 | இந்தியா | எதிர் ஹோலந்து | பேர்ல் -பகல் |
| பெப்.13 | மேற்.தீவுகள் | எதிர் நியூசிலாந்து | போர்ட் எலிசபத் -பகல் |
| பெப்.13 | சிம்பாப்வே | எதிர் இங்கிலாந்து | ஹராரே -பகல் |
| பெப்.14 | இலங்கை | எதிர் பங்களாதேஷ் | பீட்டர்மரிட்ஸ்பேர்க்- பகல் |
| பெப்.15 | கென்யா | எதிர் கனடா | கேப்ரவுன் -பகல்/இரவு |
| பெப்.15 | அவுஸ்திரேலியா | எதிர் இந்தியா | சென்சூரியன் -பகல் |
| பெப்.16 | தென்னாபிரிக்கா | எதிர் நியூசிலாந்து | ஜொகன்னஸ்பர்க் - பகல் |
| பெப்.16 | இங்கிலாந்து | எதிர் ஹோலந்து | ஈஸ்ட் லண்டன் -பகல் |
| பெப்.16 | பாகிஸ்தான் | எதிர் நமீபியா | கிம்பேர்லி -பகல் |
| பெப்.17 | *ஓய்வு தினம்.* | | |
| பெப்.18 | மேற்.தீவுகள் | எதிர் பங்களாதேஷ் | பெனோனி -பகல் |
| பெப்.19 | இங்கிலாந்து | எதிர் நமீபியா | போர்ட் எலிசபத் -பகல் |
| பெப்.19 | இலங்கை | எதிர் கனடா | பேர்ல் -பகல் |
| பெப்.19 | சிம்பாப்வே | எதிர் இந்தியா | ஹராரே -பகல் |
| பெப்.20 | அவுஸ்திரேலியா | எதிர் ஹோலந்து | பொச்செப்ஸ்ட்ரோம் -பகல் |
| பெப்.21 | *ஓய்வு தினம்* | | |
| பெப்.22 | இங்கிலாந்து | எதிர் பாகிஸ்தான் | கேப்ரவுன் -பகல் |
| பெப்.22 | தென்னாபிரிக்கா | எதிர் பங்களாதேஷ் | புலொயம்பொன்டீன் -பகல் |
| பெப்.23 | மேற். தீவுகள் | எதிர் கனடா | சென்சூரியன் -பகல் |
| பெப்.23 | இந்தியா | எதிர் நமீபியா | பீட்டர் மரிஸ்ட்பேர்க் -பகல் |
| பெப்.24 | சிம்பாப்வே | எதிர் அவுஸ்திரேலியா | புலோவாயோ -பகல் |
| பெப்.24 | இலங்கை | எதிர் கென்யா | நைரோபி -பகல் |
| பெப்.25 | பாகிஸ்தான் | எதிர் ஹோலந்து | பேர்ல் -பகல் |
| பெப்.26 | இங்கிலாந்து | எதிர் இந்தியா | டேர்பன் -பகல்/இரவு |
| பெப்.26 | நியூசிலாந்து | எதிர் பங்களாதேஷ் | கிம்பேர்லி -பகல் |
| பெப்.27 | தென்னாபிரிக்கா | எதிர் கனடா | ஈஸ்ட் லண்டன் -பகல் |
| பெப்.27 | அவுஸ்திரேலியா | எதிர் நமீபியா | பொச்செப்ஸ்ட்ரோம் -பகல் |
| பெப்.28 | இலங்கை | எதிர் மேற்.தீவுகள் | கேப்ரவுன் -பகல்/இரவு |
| பெப்.28 | சிம்பாப்வே | எதிர் ஹோலந்து | புலோவாயோ -பகல் |
| மார்ச்01 | கென்யா | எதிர் பங்களாதேஷ் | ஜொகன்னஸ்பேர்க் -பகல் |
| மார்ச்01 | பாகிஸ்தான் | எதிர் இந்தியா | சென்சூரியன் -பகல் |
| மார்ச்02 | அவுஸ்திரேலியா | எதிர் இங்கிலாந்து | போர்ட் எலிசபத் -பகல் |
| மார்ச்03 | நியூசிலாந்து | எதிர் கனடா | பெனோனி -பகல் |
| மார்ச்03 | தென்னாபிரிக்கா | எதிர் இலங்கை | டேர்பன் -பகல்/இரவு |
| மார்ச்03 | நமீபியா | எதிர் ஹோலந்து | புலொயம்பொன்டீன் -பகல் |
| மார்ச்04 | மேற்கிந்தியத்தீவுகள் | எதிர் கென்யா | கிம்பேர்லி -பகல் |
| மார்ச்04 | சிம்பாப்வே | எதிர் பாகிஸ்தான் | புலோவாயோ -பகல் |
| மார்ச்05,06 | *ஓய்வு தினங்கள்* | | |

## சுப்பர் சிக்ஸ் போட்டிகளின் விபரம்

| | | |
|---|---|---|
| மார்ச்07 | 1 ஏ எதிர் 1 பீ | சென்சூரியன் -பகல் |
| மார்ச்07 | 2 ஏ எதிர் 2 பீ | கேப் ரவுன் -பகல்/இரவு |
| மார்ச்08 | 3 ஏ எதிர் 3 பீ | புலொயம்பொன்டீன் -பகல் |
| மார்ச்09 | *ஓய்வு தினம்* | |
| மார்ச்10 | 2 ஏ எதிர் 1 பீ | ஜொகன்னஸ்பேர்க் -பகல் |
| மார்ச்11 | 1 ஏ எதிர் 3 பீ | போர்ட் எலிசபத் -பகல் |
| மார்ச்12 | 3 ஏ எதிர் 2 பீ | புலொயம்பொன்டீன்-பகல் |
| மார்ச்13 | *ஓய்வு தினம்* | |
| மார்ச்14 | 2 ஏ எதிர் 3 பீ | சென்சூரியன் -பகல் |
| மார்ச்15 | 3 ஏ எதிர் 1 பீ | ஈஸ்ட் லண்டன் -பகல் |
| மார்ச்15 | 1 ஏ எதிர் 2 பீ | டேர்பன் -பகல்/இரவு |

மார்ச்16 ஆம், 17ஆம் திகதிகள் *ஓய்வு தினங்கள்*

## அரையிறுதிப் போட்டிகளின் விபரம்

| | | |
|---|---|---|
| மார்ச்18 | சுப்பர் சிக்ஸ் 1 எதிர் சுப்பர் சிக்ஸ் 4 | போர்ட் எலிசபத் -பகல் |
| மார்ச்19 | *ஓய்வு தினம்* | |
| மார்ச்20 | சுப்பர் சிக்ஸ் 2 எதிர் சுப்பர் சிக்ஸ் 3 | டேர்பன் -பகல்/இரவு |

மார்ச்21 ஆம், 22ஆம்திகதிகள் *ஓய்வு தினங்கள்*

## இறுதிப் போட்டி

மார்ச் 23 ஆம் திகதி - தெரிவு செய்யப்படும் அணிகள் ஜொகன்னஸ்பேர்க் -பகல்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இருபது வருட அழிவிலிருந்தே மீளமுடியவில்லை இன்னொரு நாசகார யுத்தம் எமக்கு வேண்டாம்

## மாதுளுவாவே சோபித தேரர் கூறுகின்றார்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது நிறுத்தப்பட வேண்டும் என்று மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்திருக்கின்றார்.

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பௌத்த பிக்குகள் இவ்வாறு அரசியலில் ஈடுபடுவது முறையானதல்ல. இவர்கள் விருப்பு வெறுப்பற்றுச் செயற்பட வேண்டும். ஆனால் இங்கு கட்சிகள், முகாம்களாகப் பிரிந்து நின்று அரசியல் கருத்து வேறுபாடுகளைப் பரப்புவது வேதனைக்குரியது.

பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றபோதே, புலிகள் நீதிமன்றங்களையும், பொலிஸ் நிலையங்களையும் திறப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன.

கப்பல்களில் ஆயுதங்கள் கொண்டு வந்து இறக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

இத்தகைய விடயங்கள் குறித்து பிக்குகள் கருத்துக் கூறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருப்பது சமாதானப் பேச்சுக்களுக்கு மட்டுமன்றி தேசிய நலனுக்கும் உகந்ததல்ல.

வட - கிழக்குப் பிரச்சினைக்கு இருதரப்பும் சமாதானப் பேச்சுக்களை நடத்தியே தீர்வுகாண வேண்டும். நாட்டில் இன்னொரு யுத்தம் வேண்டாம்.

கடந்த இருபது வருடங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள், சிதைவுகளிலிருந்து மீண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப ஐந்நூறு வருடங்கள் தேவை. இப்படியான நிலையில் இன்னொரு யுத்தம் எமக்கு வேண்டாம் என மாதுளுவாவே சோபித தேரர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

# வட-கிழக்கு புனர்நிர்மாண நிதி அடுத்த மாதம் வழங்கப்படும்

## உலக வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புனர்நிர்மாணப் பணிகளைச செய்வதற்கான நிதியை அடுத்த மாதத்தில் இருந்து வழங்கப்போவதாக உலகவங்கி தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்ட 4 கோடி 30 லட்சம் டொலர் அவசரகாலநிதியில் இருந்து இநதப் பணம் வழங்கப்படும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் பொதுச் சுகாதாரம், மீள்குடியேற்றம், கல்வி, அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதற்கே இந்தநிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (200)

## வயோதிபர் மீது இளைஞர் குழு தாக்குதல்

யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயப் பகுதியில் நேற்று மாலை இளைஞர் குழுவொன்று வீதியால் சென்ற வயோதிபர் ஒருவரை வயரால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றது. இப்பகுதியில் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

## காய்ச்சலுக்கு மேலும் ஒருவர் பலி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவிவருகின்ற காய்ச்சலுக்கு மற்றொருவர் பலியாகியுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இச்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த துரைசாமி நல்லம்மா (வயது 57) என்ற பெண்மணியே நேற்று உயிரிழந்தார். (60)

## சமாதானத்தைக் குழப்பும் செயலுக்கு கூட்டணி கவலை!

(யாழ்ப்பாணம்)

சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கென்று சில தரப்பினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையிட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் கூட்டணி ஒன்றை உருவாக்க மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் சந்தர்ப்பவாத நடவடிக்கை என்றும் அந்தப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய சந்திரிகா-ஜே.வி.பி பேச்சு கூட்டணி உடன்பாடு எட்டப்படும்

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான முக்கியமான பேச்சுவார்த்தை இன்று நண்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜே.வி.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பாகவே இப்பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் இப்பேச்சுக்களில் கூட்டணி தொடர்பான இறுதி முடிவு ஒன்று எட்டப்படலாம் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தப் பேச்சுக்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன், இப் பேச்சுக்கள் தொடர்பாகத் தாம் ஆட்சேபம் தெரிவிக்கவில்லையென கூறியுள்ளார்.

தேசியப் பிரச்சினை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கையை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டால் அக்கட்சியுடன் கூட்டணி குறித்து பேசுவதில் தமக்கு ஆட்சேபனை கிடையாது எனத் தெரிவித்தார். (01)

# நேற்றைய விபத்துக்களில் மூவருக்குப் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று நடைபெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை சங்கீதத்துறை விரிவுரையாளர் சி.குமாரசாமி (வயது - 52) தலையில் பலத்த காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறைப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மா.சந்திரநாதன் (வயது - 38) என்பவர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூளாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் கால் முறிவடைந்த நிலையில் வீ. பிரதீபன் (வயது - 28) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கி,ச)

### தமிழகத்திலிருந்து...

களை ஏற்றி வருகின்றன.

இதையடுத்து கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கும் தமிழகப் பொலிஸார், இந்தியக் கடலோரக் காவற்படையினருடன் இணைந்து ரோந்துப் பணிகளையும் தேடுதல்களையும் ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில்- முரளி, சிங்கராஜா, செபமாலை, விமல், சுரேஷ் என்பவர்களோடு இன்னும் ஆறு பேர் இராமேஸ்வரம் கரையோரப்பகுதிகளிலுள்ள சேரன் கோட்டையில் வைத்துக் கைதாகினர்.

நாடு திரும்புவதற்கு புழல் அகதி முகாமிலிருந்து தப்பிவந்து காத்திருந்தபோதே இவர்கள் கைதாகினர்.

இதேவேளை - சுதர்ஷன் (வயது 28), தீபா (வயது 26) மற்றும் சுபாஷினி என்பவர்களுட்பட 15 பேர் கடந்த வியாழனன்று படகு மூலம் மண்டபத்தை விட்டுச்சென்றதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களைப் போல் இன்னும் பலர் கரையோரக் கிராமங்களில் படகுகளுக்காகக் காத்திருப்பதையும், மேலும் பலர் வெளியேறுவதற்குத் தயாராகி வருவதையும் காண முடிவதாக இராமேஸ்வரத்திலிருந்து எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

### மட்டுவிலில்...

சாவகச்சேரி நகரப்பகுதியில் பொதுமக்களின் வீடுகளில் தங்கியுள்ள படையினரை விலக்கிக் கொள்வதற்காகவே இப்புதிய முகாம் அமைக்கப்பட்டு வருவதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். (09)

### 700 வீடுகள்....

வீடுகள் மற்றும் இரண்டு ஹோட்டேல்களில் இருந்து படையினர் வெளியேறவுள்ளனர். இவ்வாறு வெளியேறும் படையினரைத் தங்க வைப்பதற்கான தற்காலிக தங்குமிட வசதிகளை செய்து கொடுப்பதற்கான முயற்சிகளில் படைத்தலைமை ஈடுபட்டிருக்கின்றது.

இராணுவத்தினருக்கான தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக இந்திய நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கும் இராணுவத் தலைமை தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நாய்....

மோதியதில் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விபத்து மரணம் தொடர்பாக யாழ். வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கி,ச,111,60)

### நாடாளுமன்றம்...

பான கூட்டமொன்று பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களையும், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத பத்து அமைச்சர்களையும் கட்சி மீளமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்படவுள்ளது.

இக்குழுவே நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து ஐ.தே.க.வின் திட்டங்களைத் தயார் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### புலிகளின்...

சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்திப் புலிகள் தமது நீண்டகால இலக்கினை அடையத் திட்டமிட்டு வருகின்றனர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரச படையினரின் வசம் உள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதில் குறியாக இருக்கின்றார்கள்.

இது குறித்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் நோர்வேக்காரர்கள் கொஞ்சமாவது புரிந்துகொள்வார்கள் எனத் தாம் நம்புவதாகவும் ஜே.என்.டிக்ஸிற் மேலும் தெரிவித்தார்.

### இலங்கை வரும்...

சந்தித்துப் பேச்சு நடத்தக்கூடாது எனக் கோரியே பத்து லட்சம் கையொப்பங்கள் திரட்டப்படவுள்ளன. இன்று முதல் இக்கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் மற்றும் சில கட்சிகளும் ஈடுபடவுள்ளன. இக்கையொப்ப மகஜர் கோபி அனானிடம் நேரில் கையளிக்கப்படுமெனத் தெரியவருகின்றது. (01)

Vacancies

We have career opportunities in the following positions for ideal candidates who are enegetic, dynamic and result oriented

1. MANAGER (Able to handle In bound & out bound passengers, Cargo, Local & overseas ticketing and manage the travel agent with fluency in three languages)
2. STATION MANAGER (Ability to handle the domestic airline)
3. ASSISTANT MANAGER
4. SALES MANAGER
5. TICKETING OFFICER
6. ACCOUNTS CLERK
7. FIELD OFFICER
8. SECURITY GUARD
9. DRIVER
10. TECHNICIAN
11. STORE KEEPER

Please forward your applications along with a detailed curriculum vitae to reach us within 7 days of this advertisement.

Human Resource Manager,
THAMPI AIR TOURS(PTE) Ltd
90, Kanthappasegaram Road,
Jaffna.

(சி-515)

A MEMBER OF THAMPI HOLDINGS (PTE) LTD.

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்



ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்
இன்னும் இரு வாரங்களில்
SYP Graphics
ஊடக அனுசரணை. நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.